
“ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்”

# கலசம்
# KALASAM

சித்திரை – வைகாசி – ஆனி – 2026



“பெருஞ்சோற்றுப் பிறங்கல் ஈந்தார்”

பராபவ வருடமே வருக! பாரினில் அமைதி தருக!!

ISSN 2055-6616

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

# Satash Community Care






உடற்குறைபாடு அல்லது மனநலக் குறைவு காரணமாக உங்களுக்கோ அல்லது உறவினருக்கோ உதவி தேவைப்படின் பல ஆண்டுகள் அநுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள். அவரவர் தேவைகளுக்கேற்பப் பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்துச் செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பாராட்டும் பரிசும் பெற்றது.

மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**Orchid Bungalow**
51 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Adult Services 01708 850555**

**Jasmine Bungalow**
53 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Children Services 01708 851189**

109-111 Molands Lane,
South Ockenden RM15 6DJ
**Adult Services 01708 856592**

**Trinity Community Centre**
East Avenue, London E12 6SG
**Domicilary Care 0203 200 1047**

www.satashcommunitycare.com

Letchmi Loganathan
07957 869620
letchmi@satashcommunitycare.com

Logan Loganathan
07956 377298
logan@satashcommunitycare.com

Sathian Loganathan
07949 755104
sathian@satashcommunitycare.com

மணி 34

# கலசம்
KALASAM

ஒலி 118

www.saivamunnettasangam.com Charity Registration No:292085

FREE ISSUE

கலசம்
நிருவாகக் குழு

ஆசிரியர்
க ஜெகதீஸ்வரன்

உதவி ஆசிரியர்கள்
சி அற்புதானந்தன்
சுதர்சினி வாகீசன்

விநியோகம்
சோ நிரஞ்சன்
சு இரத்தினராஜா

விளம்பரம்
நிருவாகம்
சிவ தம்பு
மா இந்துசேகரன்
வ இ இராமநாதன்

இலங்கைத் தொடர்பு
வை சிவனருட்செல்வர்
தொலைபேசி
0766167547
மின்னஞ்சல்
svarul@yahoo.co.uk

வெளியீடு
சைவ முன்னேற்றச்
சங்கம்

முகவரி
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel:
020 8514 4732

மின்னஞ்சல்
email:
smsukkalasam@gmail.com

## புனிதம் பேணப்படவேண்டியது

திருவிழாவோ அல்லது அபிடேகமோ பார்க்கலாம்; தரிசிக்கலாம் என்று கோயில்களுக்குப் போனால் அங்கே அடிக்கடி நடக்கும் ஒரு காட்சியைக் காணலாம். சிவாசாரியார்கள் எல்லாவித ஆயத்தங்களையும் செய்துவிட்டு வாசலையே பார்த்துக்கொண்டு நிற்பார்கள். வந்திருக்கும் பத்தர்களும் சிவாசாரியரையும் கோயில் வாசலையும் மாறி மாறிப் பார்த்தவண்ணம் இருப்பார்கள். காரணம் - அன்றைய உபயகாரர்கள் வரவில்லை என்பதே. அவர்கள் எத்தனைமணிக்கு வருவார்கள் என்பது அவர்களுக்கே தெரியாத விடயம். அப்படித் தாமதமாவதால் அபிடேகம், திருவிழா என்பவை காலதாமதமாகியே நிறைவடையும். வந்திருக்கும் பத்தர்களும், குறிப்பாக, விரதம் இருப்போரும் பாதிக்கப்படுவார்கள். இதை அந்த உபயகாரர்கள் சிந்திப்பதில்லை. அவர்கள் வராமல் பூசையையோ, அபிடேகத்தையோ தொடங்க சிவாசாரியார்களுக்கு உரிமையில்லை. அப்படித் தொடங்கினால் அறங்காவலரும் உபயகாரரும் அவர்களை ஒரு வழி பார்த்துவிடுவார்கள். சில கோயில்கள் இதற்கு விதிவிலக்கு.

உபயமோ வருடத்தில் ஒருமுறை அல்லது இருமுறை நடப்பது. அதை மனதில் வைத்து, அன்று ஒருநாள் மட்டும் நேரத்துக்கு வருவது என்பது கடினமான காரியமல்ல. அதை ஏன் நாம் செய்வதில்லை? பயணம் போகும்போது நாம் நேரத்துக்குப் போகாவிட்டால் விமானமோ இரயிலோ போய்விடும். பொருள் நட்டம் நமக்கு ஏற்படும். அதற்காகப் பயந்து, நேரத்துக்குப் போய்விடுகிறோம். ஆனால் நாம் போகாமல் பூசை தொடங்கிவிடுமா? இல்லையே! கோயிலை வழிபாட்டுக்குரிய புனித இடமாக, முக்கிய இடமாகக் கருதாத பொறுப்பற்ற தன்மைதான் இதற்குக் காரணம்.

பொருள் விடயங்களில் அக்கறை காட்டும் நாம் அருள் விடயத்தில் அக்கறையின்றி இப்படி இருப்பது அதிசயமாக உள்ளது. அது வரவேற்கத்தக்கதன்று. பொதுவாகவே கோயில் நிகழ்வுகளைப் பத்தியோடு பார்க்கும் பழக்கம் நம்மிடையே குறைந்து வருகிறதோ என எண்ணத் தோன்றுகின்றது. பொது இடங்களிலே மற்றவர்களுக்கு இடையூறு விளைக்காமல் எப்படி இருக்கவேண்டுமோ அதைவிடப் பலமடங்கு சமயவழிபாட்டு இடங்களிலே நாம் ஒழுகவேண்டும். வழிபடுவதைவிடப் படம் எடுப்பதற்கு முக்கியத்துவம் அளிப்பதையும் நிறுத்தவேண்டும். இப்படியான செயல்களைப் பார்க்கும் நமது அடுத்த சந்ததி பாதை மாறிப் போய்விடும். கோயில்களை மதிப்போம், புனிதத்தைப் பேணுவோம்.

**க. ஜெகதீஸ்வரன், ஆசிரியர்**

# இந்த இதழில்


| | |
|---|---|
| ஆகும் வழி | 03 |
| தமிழின் பெருமை | 06 |
| பிழைகள் எதிர்க்கப்படல் வேண்டும் கந்தபுராணச் சிந்தனைகள் | 07 |
| திருவீழிமிழலை | 10 |
| "வாசி தீரவே காசு நல்குவீர்" | 11 |
| யோகமும் வாழ்வும் | 13 |
| "வாய்முத்தம் சிந்திவிடுமோ" | 15 |
| குற்றால நாதர் பயணக் கட்டுரை | 17 |
| Saiva School of Hinduism | 26 |
| வைகாசிமாத நினைவுகள் | 30 |
| The Glories, Grace.... of Yogaswamy | 35 |
| சிவகுமாரர் | 39 |
| குற்றம் பார்க்கில் | 41 |
| சிவபுரவளாகம் சிவன்கோயில் | 43 |


**அட்டைப்படம்: சம்பந்தர், அப்பர்**

**வடிவமைப்பு - குகன்**

**கலசம் இதழ் படித்தபின் அதை நண்பருக்கு அல்லது நூல்நிலையத்துக்குக் கொடுங்கள்**

**கட்டுரைகளில் உள்ள கருத்துக்களுக்குக் கட்டுரையாளரே பொறுப்பாவர்**

# ஆகும் வழி



கிருபாநந்தவாரியார் சுவாமிகள்

சிவனை நோக்கிச் செல்வது "ஆகும் வழி"; இயமனை நோக்கிச் செல்வது "சாகும் வழி". ஆகும் வழியிற் செல்வதாக நினைத்துக்கொண்டு, சாகும் வழியிற் செல்வோர் பலருண்டு. அது தவறு. ஆகும் வழி ஆறு உண்டு. அந்த வழிகள் யாவை என விளக்குகிறது இக் கட்டுரை.

நமக்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று "ஆகும் வழி"; மற்றொன்று "சாகும் வழி".

ஆகும் வழி வடக்கு நோக்கிச் செல்வது, சாகும் வழி தெற்கு நோக்கிச் செல்வது. வடக்கே சிவபெருமான் வீற்றிருக்கிறார். தெற்கே இயமன் இருக்கிறான். சிவனை நோக்கிச் சென்றால் கிடைப்பது அவருடைய சரணம். இயமனை நோக்கிச் சென்றால் கிடைப்பது மரணம்.

நாம் அதிகநேரம் தெற்கே நோக்கித்தான் பயணம் புரிகிறோம். சில விநாடிநேரம், அதுவுங்கூட சரியில்லாமல் வடக்கு நோக்கிப் பிரயாணம் புரிகிறோம்.

"ஆகும் வழி" எது? "சாகும் வழி" எது என்று இப்போது நினைவு கூர்வோம்.

சிவத்தைப் பேணி, தவத்தைச் செய்வது ஆகும்வழி. அவநெறி சென்று வெறும் பொழுது போக்குவது சாகும் வழி.

**வடக்கும் - தெற்கும்:**

சிலர் வடக்கே போகும் இரயிலில் ஏறிக்கொண்டு நாம் வடக்கேதான் போகின்றோம் என்று கருதலாம். அவர்கள் உடம்பு வடக்கே நோக்கிப் போனாலும், சிந்தையும் செயலும் சொல்லும் தெற்கே நோக்கித்தான் செல்கின்றன.

தெற்கே நோக்கி ஒரு இரயில் போய்க்கொண்டிருக்கிறது. மணிக்கு 60 மைல் வேகத்தில் இரயில் ஓடுகிறது. இரயிலுக்கு மேல் நீளமான தண்ணீர் ரப்பர் குழாய் இருக்கிறது. அதன்மீது ஒரு சிற்றெறும்பு, தெற்கே நோக்கி ஓடுகின்ற இரயிலில் முதல் வண்டிக்கு மேலுள்ள அந்த நீர்க் குழாயின் மீது வடக்கு நோக்கி மெல்ல அசைந்துபோகத் தொடங்கியது. அது இப்போது நாம் வடக்குநோக்கிப் போகிறோம் என்று நினைக்கிறது. அது வடக்கு நோக்கிச் சென்றாலும் இரயில் தெற்கு நோக்கிச் செல்வதனால் எறும்பின் பிரயாணம் தெற்கேதான் போகின்றது. அதுபோல் நாம் சதா வேறு அவத்தொழிலும், அவச்சொற்களும், அவச் சிந்தனைகளும் உடையவர்களாக இருப்பதனால் நமது பிரயாணம் தெற்கேதான் நோக்கிச் செல்கின்றது.

"அவமாயை கொண்டுலகில் விருதா அலைந்துழலும்
அடியேனை அஞ்சலென வரவேணும்"

என்கிறார் அருணகிரிநாதர்.

இனி, அங்ஙனம் போகாமல் நமது பிரயாணத்தை வடக்கே திருப்பவேண்டும். அதற்குரிய வழிவகைகளை நன்றாக எடுத்து நமக்கு உபதேசிக்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள். பரிபூரணக் கருணையால் உலகில் உள்ள உயிர்கள் உய்யும்பொருட்டு வற்புறுத்திக் கூறி அருள்கின்றார். ஆறு வழி, ஆம் ஆறும் "ஆகும் வழி".

**ஆறு வழிகள்:**

பெருமானே! அடியேன் ஆகும் வழியாக,

1. உனது திருவடியை நினைந்து உள்ளம் குழையவேண்டும்.
2. மனம் தழலிடைப்பட்ட மெழுகு போல உருகவேண்டும்
3. நல்ல மலர்களை எடுத்து மாலையாகத் தொடுத்துத் துதிக்கவேண்டும்.
4. உனது புகழை இனிது ஓதவேண்டும்
5. தேவாதிதேவனாகிய உன்னுடைய திருக்கோயிலைக் கூட்டவேண்டும், மெழுகவேண்டும்.
6. ஆனந்த மிகுதியால் ஆடவேண்டும்

இந்த ஆறு செயல்களும் ஆகும் வழியாகும்.

"ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமான் நின் திருக்கோயில் தூகேன்மெழுகேன் கூத்தாடேன்"

எல்லாம் எதிர்மறை முகத்தாற் கூறுகின்றார். அகங்குழையேன் என்றால் அகங்குழையவேண்டும் என்பது பொருள்.

ஆடுகின்றிலை, கூத்துடை யான்கழற்கு அன்பிலை, என்புருகிப்
பாடுகின்றிலை, பதைப்பதும் செய்கிலை, பணிகிலை, பாதமலர்
சூடுகின்றிலை, சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே!
தேடுகின்றிலை, தெருவுதோ றலறிலை செய்வதொன் றறியேனே!

என்ற திருப்பாடலும் இதே கருத்தில் எழுந்தது. "ஆடுகின்றிலை" என்பதனை ஆடவேண்டும் என்று கொள்ளவேண்டும்.

மனைவியையும் மக்களையும் அழிகின்ற பணத்தையும் நினைந்து நினைந்து உருகுகின்றோம். உயிர்க்கு என்றும் துணையாக நின்று உபகரிக்கின்ற அருந்துணையாகிய இறைவனை நினைந்து உருகவேண்டாமா?

திருவடிக்கே அகம் குழைதலும் அன்பால் உருகுதலும் மனத்தின் செயல், வாழ்த்துதலும் புகழ்ந்துரைத்தலும் வாக்கின் செயல், பூமாலை புனைதலும், கோயிலைக் கூட்டி மெழுகுதலும், கூத்தாடுதலும் காயத்தின் செயல். எனவே மனம் வாக்கு காயத்தால் சிந்தித்தும் வாழ்த்தியும் வந்தித்தும் உய்யவேண்டும்.

இங்ஙனம் உய்யுநெறி அறியாது நாம் சாகும் வழிக்கே மிக்க விரைவில் போகின்றோம்.

**சாம் - சாகும், ஆறு - வழி, சாமாறு - சாகும் வழி**

"சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே"

சாகும் வழியைப்பற்றி ஒன்றும் விளக்கம் தரவில்லை. ஆகும் வழிக்குத்தான் விளக்கம் கூறினார். சாகும் வழியைப்பற்றிச் சொல்லக்கூட சுவாமிகளுக்கு மனம் வரவில்லை.

"விரைகின்றேன்" என்ற சொல்லைக் கவனியுங்கள். மலையிலிருந்து உருளுகின்ற ஒருவன் எத்துணை வேகமாக உருளுவானோ அத்துணை வேகமாக நாம் சாகும் வழியிற் சென்றுகொண்டிருக்கிறோம்.

நினைக்கும்போதே நெஞ்சம் வெடிக்கின்றது. எத்துணை உருக்கமாகப் பாடுகின்றார். அந்தத் திருவாசகத்தின் முழு உருவம் அடியில் வருமாறு:

ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமான்!நின் திருக்கோயில் தூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே

**நன்றி: திருவாசகத் தேன் *1959***




## சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம்
# 25ஆவது சைவ மாநாடு

## தலைப்பு: "சைவ இலக்கியங்களும் வாழ்வியலும்"
Theme: "Saiva Literatures and our Way of Life"

ஜூலை *11* சனிக்கிழமை - முருகன் கோயில் Highgate Hill, London
ஜூலை *12* ஞாயிற்றுக்கிழமை - சிவன் கோயில் Lewisham, London

சுவாமி சிவாக்கர தேசிகர் அவர்கள் (தமிழ்நாடு) சுவாமி போதிநாத வேலன் அவர்கள் (ஹவாய்) ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்க வருகிறார்கள்.

இவர்களுடன் விசேட சொற்பொழிவாளர்கள் ஈழத்திலிருந்தும் தமிழ்நாட்டில் இருந்தும் வந்து கலந்துகொள்கிறார்கள்.

சமயச் சொற்பொழிவு, பண்ணிசைப் போட்டிகளில் பங்குபற்றிப் பரிசு பெற்ற மாணவர்களுக்குப் பரிசளிப்பு வைபவமும் நடைபெறும்.

# தமிழின் பெருமை

தமிழுக்கு என்ன வரலாறு இருக்கிறது என்று கேட்போர் பலர் இருக்கின்றனர். ஆனால், மறைமலை அடிகள் ஒரு பட்டியலைக் கொடுத்திருக்கிறார். அவர் பட்டியலைக் கொடுக்கும் போது, வேறு ஒரு மொழி பேசுபவர்களும் தமிழ் போல் காலத்திற்குக் காலம் மொழியின் வாழ்வு பற்றிச் சொல்ல முடியாது. ஆனால்:

| | | |
|---|---|---|
| முதலாம் நூற்றாண்டில் | - | தொல்காப்பியம் |
| இரண்டாம் நூற்றாண்டில் | - | சங்க இலக்கியங்கள் |
| மூன்றாம் நூற்றாண்டில் | - | திருருவாசகம் |
| நான்காம் நூற்றாண்டில் | - | ஆசாரக் கோவை |
| ஐந்தாம் நூற்றாண்டில் | - | பெருங்காதை |
| ஆறாம் நூற்றாண்டில் | - | கல்லாடம் |
| ஏழு, எட்டு நூற்றாண்டுகளில் | - | தேவாரப்பாடல்கள் |
| ஒன்பதாம் நூற்றாண்டில் | - | ஆழ்வார் அடிகளின் பக்திப்பாசுரங்கள் |
| பத்தாம் நூற்றாண்டில் | - | சீவகசிந்தாமணி |
| பதினோராம் நூற்றாண்டில் | - | பெரியபுராணம் |
| பன்னிரண்டாம் நூற்றாண்டில் | - | முற்பகுதியில் கந்த புராணம்,<br>பிற்பகுதியில் கம்பராமாயணம் |
| பதின் மூன்றாம் நூற்றாண்டில் | - | சிவஞானபோதம் |
| பதின்னான்காம் நூற்றாண்டில் | - | தல புராணங்கள் |
| பதினைந்தாம் நூற்றாண்டில் | - | வில்லிப்புத்தூரர் பாரதம் |
| பதினாறாம் நூற்றாண்டில் | - | திருவிளையாடற்புராணம் |
| பதினேழாம் நூற்றாண்டில் | - | தேம்பாவணி, சீறாப்புராணம் |
| பதினெட்டாம் நூற்றாண்டில் | - | தாயுமானவர் பாடல்கள் |
| பத்தொன்பதாம் நூற்றாண்டில் | - | வள்ளலார் பாடல்கள் |
| இருபதாம் நூற்றாண்டில் | - | மகாகவி பாரதி பாடல்கள் |

என்று இருபது நூற்றாண்டு வரலாறு தமிழுக்கு மட்டுமே இருக்கிறது என்று சொன்னவர் மறைமலையடிகள். இதுவே நமக்குக் கிடைத்திருக்கும் மிகப்பெரிய பெருமை.

தகவல்: முனைவர் சாரதா நம்பி ஆரூரன்

# பிழைகள் எதிர்க்கப்படல் வேண்டும்

## கந்தபுராணச் சிந்தனைகள்

கலாநிதி ச சிவலோகநாதன்

பெரிய பதவிகளில் இருப்பவர்கள், அதிகாரத்தில் இருப்பவர்கள் பிழையான கொள்கை முறையைப் பின்பற்றும்போது அவர்களுக்குக் கீழே இருப்பவர்கள் சரியான பாதையிற் சென்றாற்கூட அப் பிழையான தலைவரின் கொள்கையை ஏற்று நடக்கும்படி நிர்ப்பந்திக்கப்படுவர். அல்லாவிடில் “கடுந்தண்டனைக்கு ஆளாக்கப்படுவீர்கள்” என்று மிரட்டப்படுவர். பலர் அம்மிரட்டல்களுக்கு அடிபணிந்து பிழையான பாதையைக் கைக்கொள்வர். அவ்வாறு பிழையான பாதையைக் கைக்கொள்ளக்கூடாது. பிழைகளை எதிர்த்து நின்று சரியானவற்றையே செய்யவேண்டும். சிறிய உடன் நன்மைகளுக்காகப் பிழையான கொள்கைகளை அநுசரித்தால் பிற்காலத்தில் பெரிய பழியை ஏற்கவேண்டிவரும் என்பதே கந்தபுராணம் காட்டும் கலாசாரமாகும். சூரனிடமிருந்து பெருந்துன்பங்களுக்கு ஆளான இந்திரன் தவம் செய்து மேரு மலையிலே சிவபெருமானை நேரிலே தரிசித்தான். சூரனை அழித்துத் தேவர்களையும் தம்மையும் ஆதரிக்குமாறு வேண்டினான். மெய்ப்பொருளினின்றும் நீங்கிய தக்கனது யாகத்தில் இருந்த பாவம் உம்மிடம் உள்ளது. அதனால் இத்துன்பம் அநுபவித்தீர். பின்னாளில் எமக்கு ஒரு புதல்வன் தோன்றி சூரபன்மனைக் கொன்று உம்மைக் காப்பான் என்று சொல்லிவிட்டுச் சிவபெருமான் மறைந்தார்.

மெய்ம்மைய தகன்ற தக்கன் வேள்வியி னிருந்த பாவம்
நும்மிடை யிருந்த தற்றால் நோதக வுழந்தீர் மேனாள்
நம்மிடை யொருசேய் வந்து நணுகிவெஞ் சூரைக் காதி
இம்மென வும்மைக் காப்பன் எனப்புகன் றிறைவன் போனான்

மேருப்படலம் *35*

இவ்வாறாக மெய்ம்மையகன்ற தக்கனின் யாகத்தில் தேவர்கள் எவ்வாறு அகப்பட்டார்கள் எனப் பார்ப்போம்.

தந்தையாகிய பிரம்மதேவரிடம் தக்கன் உபதேசம் கேட்கிறான். “சிவபெருமானின் அருளைப் பெறாமல் வீடுபேறு அடைந்தவர்களில்லை. அவரின் அருளின்றி வாழுகின்ற தேவர்களும் எவருமில்லை. அவருடைய அருள் கிடைக்கப்பெற்றால் கிடைக்காத அரிய பொருள் ஒன்றில்லை. எனவே நீ அவரை அடைக்கலம் அடைவாயாக” என்று பிரம்மதேவர் உபதேசம் செய்தார். கேட்ட தக்கன் சிவபெருமானை நோக்கிக் கடுந்தவஞ் செய்தான். சிவபெருமான் தோன்றி வேண்டும் வரம் யாதெனக் கேட்டார். “சுவாமி! எத்திசைகளிலும் எல்லா உலகங்களிலும் என்னுடைய ஆக்ஞாசக்கரம் செல்லும்படியும், உம்மை வந்து தொழுகின்ற உயிர்களெல்லாம் என்னை வந்து துதிக்கவும் யான் உம்மையன்றி வேறு யாரையும் வழிபடாதிருக்கவும் தேவர்களும் அவுணர்களும் யான் பணித்த பணிகளைச் செய்யவும் எனக்கு அநேக புதல்வர்களும் புதல்விகளும் உண்டாகவும் உம்முடைய சக்தியாகிய உமையம்மை எனக்கு மகளாக வர, நீர் மறையவராக வந்து திருமணம் செய்யவும் அருளவேண்டும்” என்று தக்கன் கேட்டான். சிவபெருமான் அவ்வாறே வரம் ஈந்தார். உமாதேவியார் தக்கனுக்கு மகளாக வந்தார். உரிய காலத்திலே சிவபெருமான் அவரை வதுவை செய்ய வந்தார். திருமணச் சடங்குகள் முடியுமுன்னர் மறைந்தருளினார். பிறகு வருந்தித் தவஞ்செய்த உமையம்மையையும் அழைத்துச் சென்றுவிட்டார். அகந்தையடைய, தக்கன்

கடும்கோபம் கொண்டு சிவபெருமானைப் பழித்தான். அவனைக் கைலை மலைக்கு அனுப்பி இக்குழப்பத்தைத் தீர்க்கத் தேவர்கள் விரும்பினர். அவனை ஒருவாறு சம்மதிக்கச் செய்து கைலை மலைக்கு அனுப்பிவைத்தனர். கைலை மலைக்குச் சென்ற தக்கனை வாயிற் காவல் செய்யும் பூதகணங்கள் தடுத்தனர். தக்கன் அவர்களைப் பார்த்து வெகுண்டு, “என் மகள் தன் நாயகனோடு இங்கே இருப்பதைப் பார்த்தறிய வந்தேன். நீங்கள் அதைத் தடுப்பதென்ன?” என்று கேட்டான். பூதகணங்கள் அவனுடைய நன்றி மறந்த ஆவணத்தோடு கலந்த குணத்தைச் சாடியதுடன், “உள்ளே போய் அன்பினோடு வழிபடுவாயாயின் உள்ளே செல்லுதி. அல்லது உன் நகருக்குத் திரும்பிப்போ” என்று சொன்னார்கள். தக்கன் அவர்களைத் திட்டிவிட்டுத் தன்னகருக்குத் திரும்பினான். திரும்பிய தக்கனைத் தேவர்கள் சென்று தரிசித்தார்கள். தன்னுடைய மகளும் மருமகனுமாகச் சேர்ந்து வாயிற் காவலர்களைக்கொண்டு தன்னைத் தடுக்குமாறு செய்ததாகவும் பழித்துரைப்பித்ததாயும் சொன்ன தக்கன் அவர்களிடம் வலியச் சென்ற தன்மீதே குற்றம் என்று சொன்னான். பிறகு, “நல்லது நல்லது என்னை மதிக்காத சிவனையும் உமையையும் நீங்கள் இன்றுமுதல் என்றும் வணங்கித் துதிக்கவேண்டாம். அதுவே அல்லாது மதிக்கவும் வேண்டாம். அந்தக் கட்டளையை நீங்கள் மறுத்தால் உங்கள் பதவி உரிமைகளை உடனே மாற்றிவிடுவேன்” என்றான்.

நன்றுநன் றென்னை எண்ணா நக்கனை உமையை நீவிர்
இன்றுமுன் னாக வென்றும் இறைஞ்சியே பரவு கில்லீர்
அன்றியும் மதித்தீர் அல்லீர் அப்பணி மறுத்தீ ராயின்
மன்றுநும் முரிமை இன்னே மாற்றுவன் வல்லை யென்றான்

தக்கன் கயிலை செல் படலம் *22*

சினந்து இங்ஙனம் கூறிய தக்கனைத் தேவர்கள் அனைவரும் பார்த்து, “எங்களை வெறுத்து இப்படிச் சொன்னாய் போலும். முன்னம் மறுத்தவை எவையேனும் உண்டோ? இல்லையன்றோ! அங்ஙனமே இனிமேலும் உன் ஏவல் வழியே நிற்போம். எங்களைக் கோபிக்க வேண்டாம்” என்று சொல்லிவிட்டுத் தத்தம் நகருக்குச் சென்றனர். இவ்வாறாகப் பலகாலம் தேவர்கள் தக்கனுடைய ஏவலைச் செய்துகொண்டு வந்தனர். பிழையென்று தெரிந்தும் தக்கனின் ஏவலை நிறைவேற்றினர். சிவனருளால் பிரம்மதேவன் ஒரு யாகம் செய்ய எண்ணினார். அவர் கைலைக்குச் சென்று சிவபெருமானை அழைத்தார். அவர் நந்திதேவரை அனுப்புவதாக வாக்களித்தார். யாகத்துக்கு வந்தவர்கள் எல்லோரையும் வரவேற்றார். தக்கனையும் வரவேற்று நாயகமாக இருக்கச்செய்தார். அப்போது நந்திதேவர் வந்தார். அவரைப் பிரமன் வரவேற்று ஒரு நல்ல இருக்கையையும் நல்கினார். தக்கனால் பொறுக்கமுடியவில்லை. சிவபெருமானையும் நந்திதேவரையும் நிந்தித்தான். சிவபெருமானுக்கு அவி கொடுக்காது தடுத்தான். நந்திதேவர் கடும் சினம் கொண்டார். கண்ட பிரம்மனும் விஷ்ணுவும், சிவனுக்குரிய அவியைத் தராது தடுத்த தக்கனுக்குப் பயந்து ஒரு சொல்லும் இங்கு கூறுதல் தகாதென அவன் போக்குக்குச் சம்மதித்து இருந்தோம். அந்தோ! அதைப் பொறுக்காமல் நந்திதேவர் சினம் கொண்டார். என்ன நிகழுமோ என அஞ்சினர். நந்தி தேவர் தக்கனைப் பார்த்து, “இனி சிவனை இகழ்ந்து பேசுவாயானால் உன்னுடைய தலையைத் துண்டிப்பேன்” என்று சொன்னார். தொடர்ந்து, “சிவபெருமானை முதல் என்று கொள்ளாமல் வேள்வி செய்பவரின் தலை அறுபடுவதாக” என்று சாபமிட்டார். காளை வாகனத்தையுடைய சிவபெருமானை நிந்தனை செய்த வாயுடைய உன் அற்பத் தலை அழிந்துபோக. உடலுடன் பொருந்தாது மாறுபடும், சிறுமையைத் தரும் அற்பத் தலை யாவரும் காண உனக்குக் கிடைப்பதாக. அன்பற்ற அற்பத் தலையுடைய மூடனே! உன்னைச் சேர்ந்த இந்தத் தேவரும் ஒருநாள் அரிய உயிரை இழந்து, பின் உயிர்பெற்று எழுந்து அளவில்லாத யுகமெல்லாம் சூரபதுமன் என்னும் அசுரனால் துன்பம் அடைவாராக” என்று சாபமிட்டார்.

ஈரமில் புன்மனத் திழுதை மற்றுனைச்
சாருறு கடவுளர் தாமும் ஓர்பகல்
ஆருயிர் மாண்டெழீ அளப்பிலா வுகஞ்
சூரெனும் அவுணனால் துயரின் மூழ்கவே

பிரமயாகப் படலம் 27

இவ்வாறு சாபமிட்ட நந்திதேவர் யாகசாலையை விட்டு வெளியேறினார். யாகம் குழம்பியது. இதன்பிறகு பலகாலம் யாகங்கள் நடைபெறவில்லை. பிறகு தக்கன் ஒரு பெரிய யாகம் செய்து திருமாலுக்கு அவி கொடுக்க முயன்றான். யாகம் வீரபத்திரரினால் அழிக்கப்பட்டது. இவ்வாறாகப் பிழையைப் பிழையென்று எதிர்க்காது விட்ட தேவர்கள் பின்னாளிலே சூரபன்மனால் துன்பம் அடைந்தார்கள். கந்தபுராணம் காட்டும் முழுத் தத்துவமுமே பிழைகளுக்கு எக்காரணத்தையிட்டும் ஒத்துப்போகக்கூடாது; பிழைகள் எதிர்க்கப்படவேண்டும் என்பதே!

வான்முகில் வழாஅது பெய்க! மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க! குறைவிலா(து) உயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க!
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக! உலக மெல்லாம்

கந்தபுராணம்
கச்சியப்ப சிவாசாரியார்

அன்பான கலசம் வாசகர்களுக்கு,

இந்த இதழுடன் கந்தபுராணச் சிந்தனைகள் தொடர் நிறைவடைகிறது. கடந்த நாற்பத்தேழு கலசம் இதழ்களில் இக் கட்டுரைகள் தொடர்ந்து வெளிவந்தன. வாசகர்கள் படித்துப் பயனடைந்திருப்பீர்கள் என்று நம்புகிறோம்.

இந்தக் கட்டுரைகளைக் கலசத்தில் பிரசுரிக்க அநுமதி தந்து ஆதரித்தவர் "கந்தபுராணச் சிந்தனைகள்" என்ற நூலின் ஆசிரியர் கலாநிதி சங்கரப்பிள்ளை சிவலோகநாதன் ஆவர். இந்த நூல் இலண்டன் ஸ்ரீமுருகன் கோயில் கும்பாபிஷேகச் சிறப்பு வெளியீடாக 27.08.2004 இல் மேற்படி கோயில் வளாகத்தில் வெளியிடப்பட்டது.

நூலாசிரியர் கலாநிதி சிவலோகநாதன் அவர்களுக்கு கலசம் ஆன்மிக இதழ் சார்பில் மிகுந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

- ஆசிரியர், கலசம்.



# திருவீழிமிழலை

சோழவள நாட்டிலே காவிரிக்குத் தென்கரையில் இருக்கும் 61ஆவது பாடல்பெற்ற தலம் திருவீழி மிழலை. திருவாவடுதுறை ஆதீனத்தின் அருளாட்சிக்கு உட்பட்ட தலம் இது. திருஞானசம்பந்தர் பதினைந்து தேவாரப்பதிகங்களை இத்தலத்தில் அருளியுள்ளார். திருநாவுக்கரசர் சுவாமிகள் எட்டுப் பதிகங்களும் சுந்தரமூர்த்தி நாயனார் ஒரு பதிகமும் அருளியுள்ளனர். சேந்தனாரின் திருவிசைப்பா பதிகம் ஒன்றும் இந்தக் கோயிலில் அருளப்பட்டது. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்ப் பாடலும் உள்ளது.

காத்தியாயன மகரிஷியின் யாகத்தில் தோன்றிய உமையம்மையைத் திருமணம் செய்துகொண்டு எப்போதும் மணவாளக்கோலத்தில் சிவன் இத்தலத்தில் எழுந்தருளியுள்ளார். அதனால் திருமணத் தடை நீக்கும் ஆலயமாகவும் இது கருதப்படுகிறது.

திருமால் சக்கராயுதத்தைப் பெறுவதற்காக இத்தலத்து இறைவனைத் தினமும் ஆயிரம் தாமரை மலர்களாற் பூசித்து வந்தார். ஒரு நாள் இறைவர் ஒரு மலரை மறையச் செய்ய, அன்று தன் கண்களில் ஒன்றை இடந்து வைத்துத் தனது வழிபாட்டைத் திருமால் நிறைவுசெய்தாராம். அதனைக் கண்ட சிவன் சக்கராயுதத்தை வழங்கினார் என்றொரு வரலாறும் உண்டு. கோயிலின் விமானம் விண்ணிழி விமானம் என்று குறிப்பிடப்படுகிறது. இது விஷ்ணுவால் தாபிக்கப்பெற்றது.

சித்திரை மாதத்தில் இங்கு பெருவிழா நிகழ்கிறது. மணக்கோலத் திருவிழா சிறப்பாக நடைபெறு கிறது. மணவாளப் பெருமானின் திருவடியில் திருமால் கண்ணைப் பறித்து வைத்து அர்ச்சித்த அடையாளம் இன்னும் இருக்கிறது.

*சிவனின் திருநாமம் வடமொழியில் நேத்திரார்ப்பணேசர் - விழியழகர் (வீழியழகர்)*
*அம்பாளின் திருநாமம் சுந்தரகுஜாம்பிகை - அழகிய முலையம்மை*

சம்பந்தப் பெருமானும் அப்பர் பெருமானும் திருத்தலங்களைத் தரிசித்துக்கொண்டு இங்கு வந்தபோது பஞ்சம் மிகுந்ததால் அவ்வூர் மக்கள் பசி பட்டினியால் வாடினர். ஊர்மக்களோடு யாத்திரிகர்களும் கோயில் அர்ச்சகரும் உணவின்றி இருந்தனர். இதைக் கண்டு பொறுக்காத நாயன்மார் இருவரும் மிகுந்த கவலையோடு இறைவனை வணங்கிவிட்டு இரவு அங்கே தங்கினர். இறைவன் அவர்களின் கனவிற் தோன்றி, தினமும் படிக்காசு வைப்பதாகவும் அதைப் பயன்படுத்தி உணவளிக்கும்படியும் கூறினார். இருவரும் மகிழ்ந்து அங்கே பஞ்சம் தீரும்வரை உணவளித்துத் தங்கினர். இதில் சம்பந்தப் பெருமானுக்குக் கிடைத்த காசு மாற்றுக் குறைந்திருந்ததால் அவரின் பணி தாமதமாகியது. அதை அறிந்த சம்பந்தர் "வாசி தீரவே காசு நல்குவீர்" என்ற பதிகம் பாடி அந்தக் குறையை நிவர்த்தி செய்தார் என்று பெரியபுராணம் பகர்கிறது. கோயிலின் வடக்கு வீதியிலே சம்பந்தர் மடமும் அப்பர் மடமும் இருப்பதாகத் தெரிகிறது. இருவருக்கும் சந்நிதிகளும் உள்ளன.

*திருமுறைகள்:*

| | |
|---|---|
| *திருஞானசம்பந்தர்:* | *திருமுறை 1 பதிகங்கள் 4,11,20,35,82, 92, 124,132 திருமுறை 3 பதிகங்கள் 9,80,85,98,111, 116, 119* |
| *திருநாவுக்கரசர்:* | *திருமுறை 4 பதிகங்கள் 64,95, திருமுறை 5 பதிகங்கள் 12, 13 திருமுறை 6 பதிகங்கள் 50,51,52,53* |
| *சுந்தரர்:* | *திருமுறை 7 பதிகம் 88* |
| *சேந்தனார்:* | *திருமுறை 9 பதிகம் 5* |

**நன்றி: திருமுறை மின்னம்பலம், தருமையாதீனம்**

# வாசிதீரவே காசு நல்குவீர்

இடைக்காடு சுயம்பு

திருநாவுக்கரசு நாயனாரும், திருஞானசமபந்தமூர்த்தி நாயனாரும் யாத்திரையில் திருவீழி மிழலையில் இரண்டு மடங்களில் தங்கியிருந்தனர். அங்கு கைத்தொண்டு வழிபாடுகள் செய்து கொண்டும், அயலிலுள்ள தலங்களுக்குச் சென்று வழிபட்டும் பல நாள்கள் இருந்தனர். அப்போது எதிர்பாராத வண்ணம் மழை பெய்யாமல் விளைச்சல் வளங்குன்றிப் பஞ்சமேற்பட்டது. அங்குள்ள மக்கள் உணவுக்குறைவால் மெலிந்து வாடினார்கள். தல யாத்திரை செய்வோர், வழிப்போக்கர்கள் ஆகியோரும் துன்பப்பட்டார்கள். கோயில் பூசைகளுக்கும் முட்டுப்பாடு ஏற்பட்டது. இவைகளைக் கவனித்த எமது நாயன்மாரிருவரும் ஒருநாள் கூடிப்பேசி எமது தொண்டர்களுக்கும், அடியார்களுக்கும் துன்பம் நேருமோ? இறைவரே காப்பாற்ற வல்லவரெனத் தொழுது நித்திரைக்குப் போனார்கள். அன்றிரவு கனவில் தோன்றி இறைவர் இப்படிச் சொன்னார்:

உலகியல்பு நிகழ்ச்சியால் அணைந்த தீய
உறுபசிநோய் உமையடையா தெனினு மும்பால்
நிலவுசில நெறிசார்ந்தோர் தம்மை வாட்டம்
நீங்குதற்கு நித்தம் ஓரோர் காசு நீடும்
இலகுமணிப் பீடத்துக் குணக்கும் மேற்கும்
யாமளித்தோம் உமக்கிந்தக் காலந் தீர்ந்தால்
அலகில்புக ழீர்தவிர்வ தாகும் என்றே
அருள்புரிந்தார் திருவீழி மழலை ஐயர்.
(குணக்கு - கிழக்கு)

உங்களைப் பஞ்சம் வாட்டாது. என்றாலும் உம்முடன் கூடித் திரியும் தொண்டரும் மற்றையோரும் வாடுவர். அதனால் பஞ்சம் தீரும் வரை கோயில் கிழக்கு, மேற்கு வாயில்களில் பீடங்களில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு காசு வைக்கிறோம். அதைக்கொண்டு அன்னதானஞ் செய்க.

தீயுறு பசி நோய் - பசிநோய் மிகவும் பொல்லாதது. மறைந்த காஞ்சிப் பெரியவர் சங்காராச் சாரியார் "பாவியையும் பசிவாட்டக் கூடாது" என்று சொன்னார். பஞ்சமா பாதகஞ் செய்தவனும் பசியால் வருந்தினால் அவனது பசியைத் தீர்க்க வேண்டும். அவன் செய்த பாவத்தை அவன் அநுபவிப்பான். அவனது பசியைத் தீர்த்தவருக்குப் புண்ணியஞ் சேரும். பாரதியார், "தனியொருவனுக்கு உணவில்லையெனில், இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்" என்று முழங்கினார். திருமூலர் "வேட்கை உடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின், காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே" என்று சொன்னார். உண்ணும் போது மற்றவர்க்கும் பரிவுடன் கொடுத்து உண்ண வேண்டும். நாயன்மாரிருவரும் இதற்கு உதாரணமாய் நடந்து காட்டினர். நாயன்மார் நித்திரையில் கனவு மூலம் இறைவர் பரிந்து அருளியதைக் கேட்டு உணர்ந்தனர். மறுநாள் காலையில் வழிபடச் சென்றவர்கள் பீடங்களில் ஒவ்வொரு பொற்காசு இருக்கக் கண்டனர். நன்றியுடன் இறைவனைப் போற்றி எடுத்துக் கொண்டனர். மடத்துக்கு வந்து ஊரில் பறை மூலம், அடுத்த நாள் முதல் அடியவர்க்கு அன்னதானம் வழங்கப்படும் என்று அறிவித்தனர். மறுநாள் தொடக்கம் தொண்டர்கள் அங்காடிக்குப் போய் பண்டங்களை வாங்கிச் சமையல் செய்து உணவளித்தார்கள். ஆதரவற்று பசித்து வந்தோரெல்லோருக்கும் கொடுத்தார்கள்.

சிலநாள்களில் பிள்ளையார், அப்பர் மடத்தில் அன்னதானம் முடிந்த பிற்பாடுதான் தனது மடத்தில் அடுப்புப் பற்றவைக்கிறார்களென்று கவனித்தார். உரியவர்களை விசாரித்தார். அவர்கள் பிள்ளையார்முன் பணிந்து, "சுவாமீ!, அப்பருடைய தொண்டர்களுக்கு விரைவாகப் பண்டங்களைக் கொடுக்கிறார்கள். அது நிறைந்த பெறுமதியுடையதாம். நாம் கொடுக்கும் காசு மாற்றுக் குறைவாம். அதைப்பல இடங்களிலும் கொடுத்துச் சோதித்துப் பார்த்து அதிகநேரம் எடுக்கிறார்கள். இதுவே காரணம்" என்று சொன்னார்கள் . உடனே பிள்ளையார் ஆராய்ந்தார். உண்மைக் காரணம் புலப்பட்டது. "அப்பர் உழவாரத் தொண்டு செய்வதால் நல்ல பொருள் கிடைக்கிறது. நடந்துதான் யாத்திரை போவார். நல்ல பொன் வேண்டுமானால் பாடித்தான் பெற வேண்டும்" என்று துணிந்து கோயிலுக்குப் போய்ப் பதிகம் ஒன்று பாடினார்.

பதிகம்:

1. வாசிதீரவே, காட்சு நல்குவீர், மாசின் மிழலையீர், ஏசவில்லையே.
2. இறைவராயினீர், மறை கொண் மிழலையீர், கறைகொள் காசினை, முறைமை நல்குமே.
3. காழிமாநகர், வாழிசம்பந்தன், வீழிமிழலை மேல், தாழும் மொழிகளே.

மறுநாள் தொடக்கம் பிள்ளையாருக்கும் சுத்தமான பொன் கிடைத்தது. இரண்டு மடங்களிலும் ஒரே நேரத்தில் அடியவர்களும் மற்றையோரும் அமுதுண்டு வாழ்த்தினர்.

அருவிலையிற் பெறுங்காசும் அவையே ஆகி
அமுதுசெய்யத் தொண்டரள விறந்து பொங்கி
வருமவர்கள் எல்லார்க்கும் வந்தா ருக்கும்
மகிழ்ந்துண்ண இன்னடிசில் மாளா தாகத்
திருமுடிமேற் றிங்களோடு கங்கை சூடும்
சிவபெருமான் அருள்செய்யச் சிறப்பின் மிக்க
பெருமைதரு சண்பைநகர் வேந்தர் நாவுக்
கரசரிவர் பெருஞ்சோற்றுப் பிறங்கல் ஈந்தார்.

(பிறங்கல் - மலை, குறைவின்றி உணவளித்தார்கள்)

நாயன்மார் இருவருக்கும் நல்ல பொன் கிடைத்து. அதைக்கொண்டு ஆக்கிய உணவு இறைவர் அருளால் வருவோரெல்லாம் மகிழ்ந்து உண்ணப் போதுமானதாயிருந்தது. சண்பை நகர் வேந்தரும், நாவுக்கரசரும் இவ்வாறு பெரிய அளவில் அன்னதானஞ் செய்து, மகிழ்ந்திருந்தார்கள். சிறிது காலத்தில் பஞ்சம் நீங்கியது. நாயன்மார் தலையாத்திரையைத் தொடர்ந்தார்கள்.
இந்தச் சரித்திரப் பகுதிக்குச் சான்றுகள் :-

1. சுந்தரமூர்த்திநாயனார் திருநாகைக்காரோணப் பதிகம். பாடல் - 7
2. சுந்தரமூர்த்திநாயனார் திருவீழிமிழலைப்பதிகம் பாடல் - 8
3. சேந்தனார் திருவிசைப்பா பாடல் - 12

நாயன்மாரிருவரும் தங்கியிருந்த மடங்கள் இப்போது சிறுகோயில்களாக சிலைகளுடன் வழிபடப்படுகின்றன. பொற்காசு பெற்ற பெரியோரின் பொன்னடிகள் போற்றி போற்றி!

திருச்சிற்றம்பலம்

# யோகமும் வாழ்வும்

ஸ்ரீ. நதிபரன் (யோகா போதனாசிரியர் - நல்லூர்)

ஒரு கலை வடிவம் இற்றைக்கு பல்லாயிரம் வருடங்கள் கடந்தும் வாழ்ந்து வருகின்றதெனில் அதனுள் அமிழ்ந்திருக்கக்கூடிய அழியாப் பெருமைகள், தத்துவப்பொருண்மைகள் மக்கள் மத்தியில் ஆழமாக வேருன்றியிருக்க வேண்டும். இல்லாவிடில் காலவோட்டத்தில் அதன் இருப்பானது அடித்துச்செல்லப்பட்டிருக்கும். 64 கலைகளுள் ஒன்றாகத் திகழும் யோகக்கலையின் நுண்மைகள் குறித்துச் சிலாகிக்கையில் பல்லரிய சிறப்புகள் பொதிந்துள்ளமையை அறிந்துகொள்ள முடியும். மனித வாழ்வினை வரன்முறைக்குட்படுத்தி செழுமையுற, பயனுற வாழும் வழிமுறைகள் பற்றி வகுத்துரைக்கும் இக்கலைபற்றிய பிரக்ஞைபூர்வமான புரிதல்கள் காலவோட்டத்தில் அதிகரித்து வருகின்றமை கண்கூடு. உலக நாடுகளைப் பொறுத்தவரையில் யோகத்திலுள்ள நோய் குணமாக்கும் தன்மையை ஆய்ந்துணர்ந்துகொண்டமையால்தான் அதன் மகத்துவம் பரந்து கிளைவிட்டு வருகின்றது. மக்களின் இயற்கைக்கு முரணான தற்போதைய வாழ்வியல் மாற்றத்தின் ஆகர்சிப்பினால் நோய்கள், பிணிநிலைகளின் பீடிப்புக்களால் அல்லலுற்று வரும் நிலையில் பக்கவிளைவுகள் இல்லாத, செலவில்லா மருத்துவமுறையாக யோகத்தினை கைக்கொள்ளத் தலைப்படுகின்றனர். காலாதிகாலம் நவீன மருத்துவ விஞ்ஞானமுறைகள் எவ்வளவுதான் முன்னேற்றமடைந்து வந்தாலும் மேற்கிளம்புகின்ற நோய்த்தாக்கங்களிற்கு அவை ஈடுகொடுக்க அல்லது கட்டுப்படுத்த முடியாமல் தோல்வி கண்டு வருகின்றமையும் கண்கூடு. இந்நிலையில் இயற்கையோடிணைந்த வாழ்வியல் வழிமுறையாகவும் ஆன்ம ஈடேற்றத்திற்கான சாதனமாகவும் சித்தர்கள், மாகான்களால் ஆராதித்து போஷிக்கப்பட்ட யோகக்கலையானது வாழ்வியலின் செழுமைநிலையினை எய்துவதற்காக உலக மக்களால் பின்பற்றப்பட்டு வருகிறது.

இங்கு ஆரோக்கியம் என்ற எண்ணக்கருவானது உடல், உள, சமூகம், ஆன்மிகம், சூழல் போன்ற விடயங்களில் நன்னிலை அடைவதனை நோக்காக கொண்டிருந்தாலும் பொதுவாக உடல், உள ஆரோக்கியத்தினை மேம்படுத்துவதனை மையப்படுத்தியே அதிகம் பேசப்படுகின்றன. இயற்கைக்கு முரணான நமது வாழ்வியல் முறையினால் நோய்களின் பெருக்கங்களும் அதற்கான மருந்துவகைகளின் உற்பத்தி - நுகர்வின் வேகமும் அதிகரித்துவருகின்றன. பொதுப்புத்தியில் நோக்கின் தற்போதைய மருந்துகளில் இருவிடயங்களை நம்மால் அவதானிக்க முடியும்.

**மக்கள் இறக்காமலும் இருக்க வேண்டும்; அத்துடன் சுகதேகிகளாக இருக்கவும் கூடாது. ஒருவருக்கு உடலில் எங்கோ பாதிப்பு ஏற்பட்டுள்ளது என வைத்துக்கொள்வோம். நோய்க்கு தீர்வு நாடி வைத்தியசாலை சென்றால் எல்லா மருத்துவப் பரிசோதனைகளையும் முடித்தவுடன் நோய்க்கான அறிகுறிகள் ஏதும் தென்படின் அதற்குரிய மருந்துவகைகளை வைத்தியர் பரிந்துரைப்பார். குறித்தவொரு பிணிக்கு மருந்து வகைகளை உட்கொள்ள ஆரம்பித்தால் இறக்கும் வரையிலும் தொடர்ச்சியாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கும் துரதிஷ்டமான நிலைமை களைப் பார்க்கிறோம். இதனை அடிப்படையாக வைத்தே மருந்துகளை உற்பத்தி செய்யும் பல்தேசிய நிறுவனங்களும் செயற்பட்டு வருகின்றன. ஒருவர் ஆரோக்கியமாக இல்லாதுவிடின், அதாவது நோய்வாய்ப்படுகையில் மருந்துப்பொருள்களின் நுகர்வு வீதம் ஏறுமுகமாகும் அதே வேளை அவர் இறக்காமல் நோய்களுடன் வாழ்க்கையை நீண்டகாலம் கழிப்பாராகில் அவற்றின் தொடர் பயன்பாட்டால் ஔடத உற்பத்தி நிறுவனங்களிற்கு அதிக வருமானங்கள் ஈட்டுவதையும் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்.**

எனவே பக்கவிளைவுகளற்றதும் செலவற்றதும் பாதுகாப்பானதுமாகிய முன்னோர்கள் நமக்களித்துச் சென்ற அரும்பெரும் பொக்கிஷமான யோக நெறிமுறைகளை நம் வாழ்க்கையில் சரிவரக் கடைப்பிடித்தால் நீண்ட ஆயுளுடன் சந்தோஷமாக வாழமுடியும் என்பதைச் சித்தர்களின் அனுபவ ரீதியாக நிறுவியிருக்கின்றனர்.

தற்கால மக்களது வாழ்வியல் கணிசமான மாற்றங்களைச் சந்தித்து வருகின்றது. இயற்கைக்கு முரணிலையாக வாழ்வியல் செல்நெறி கட்டமைகின்றமையால் வழமைக்கு மாறாகப் பல்வேறு நோய், பிணித் தாக்கங்களின் கோரப்பிடிக்குள் சிக்குவதற்கும் வழிசமைக்கின்றன. "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற நிலை மாறி, தற்போது "வைத்திய சாலையில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றெண்ணும் வகையில் முன்னரைக்காட்டிலும் வீதிக்கு வீதி தனியார் வைத்தியசாலைகளின் பெருக்கமும் யாழ்.குடாவினை ஆக்கிரமித்து வருகின்றமை நோயாளிகளின் எண்ணிக்கையிலேற்படும் அதிகரிப்பையே சுட்டுகின்றது. நீங்கள் ஒருதடவை மருத்துவப் பரிசோதனைக்கெனத் தனியார் வைத்தியசாலை ஒன்றிற்குச் செல்லும் போது வைத்திய சேவை எங்ஙனம் வியாபார மாயைக்குள் அமிழ்ந்து வருகின்றது என்பது புலனாகும். ஒரு நாட்டில் வைத்தியசாலைகள், சிறைச்சாலைகள் என்பவற்றின் எண்ணிக்கை அதிகரிக்கின்றதெனில் அந்நாட்டின் அபிவிருத்தியானது பின்னோக்கியே செல்லும் என்பது வெளிப்படை. எனவேதான் மேலைத்தேய கலாசாரங்களில் ஈர்ப்புக்கொள்ளாது செலவில்லாத இயற்கையோடிணைந்த யோக நெறிமுறையினைப் பின்பற்றும் விருப்பு எல்லோர் மனங்களிலும் துளிர்விட வேண்டும். அத்துடன் இன்றைய சமூகம் தடம் மாறிச்செல்வததால் எதிர்கால இளம் சந்ததி இருண்ட உலகத்தினை நோக்கியே பயணப்படுகின்றது. தற்காலத்தில் இதனைத் தடுத்து நிறுத்தவல்ல பிரம்மாஸ்திரமாக யோகக்கலை திகழ்கின்றதெனில் மாற்றுக்கருத்தில்லை.

சமகாலத்தில் யோகக்கலை மீதான மக்களின் நாட்டங்கள்- ஈடுபாடுகள் தன்னெழுச்சியாக அதிகரித்துவரும் நிலையில் அதிகளவு வேற்றின மக்கள்கூட இன மத பேதம் கடந்து இதனை பயில்வதற்கு அதிக ஆர்வம்காட்டி வருவதனையும், இதன்மூலம் உலக நாடுகள் பலவற்றில் கல்விக்கூடங்களிலும் யோகம் ஒரு பாடமாக உள்ளடக்கப்பட்டு போதிக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. நமது பிரதேசத்தினை பொறுத்தவரை புற்றீசல்கள் போல யோகப்பயிற்சி மையங்கள் உருவாகி வருகின்றமையும் பல பாடசாலைகளில் யோகாசனப் பயிற்சிகள் குறிப்பாக அதன் முக்கிய பிரிவாக அமைகின்ற சூரிய நமஸ்காரம் எனும் பயிற்சிமுறையானது மாணவர்களால் பின்பற்றப்பட்டு வருவதனையும் நாட்டிலுள்ள ஒரு சில பல்கலைக்கழகங்களில் கூட யோகக்கலை பயிற்றப்பட்டு வருகின்றமையும் நோக்கத்தக்கது. அத்துடன் தற்காலத்தில் சர்வதேச ரீதியாக பல்வேறு கல்விச்சாலைகளில் போதிக்கப்பட்டு வருகின்றமையும் உலகில் ஏராளமானோர் இக்கலையின்கண் இருக்கின்ற பல்வேறு நன்மைகள், குறிப்பாக நோய் குணமாக்கல் திறன் அதிகமிருப்பதனால் இதன்பால் ஈர்க்கப்பட்டு கூடுதலானோர் இன, மத பேதம் கடந்து பயின்று பயன்பெற்று வருகின்றமையின் காரணமாகவோ என்னவோ அதன் மீது மக்கள் மத்தியில் விழிப்புணர்வினை மென்மேலும் அதிகரிப்பதற்காக பன்னாட்டு அரசியலின் உயர் பீடமாக விளங்குகின்ற ஐ.நா சபைகூட சர்வதேச ரீதியாகக் கொண்டாடிக் கௌரவம் செய்யவேண்டிய தினங்களுள் யோகக்கலையினையும் உள்ளடக்கியிருப்பதானது அதன் தாற்பரியத்தை - மேன்மையினை முரசறைந்து நிற்கின்றது. அதுமட்டுமல்லாமல் எமது நல்வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து அடிப்படை அம்சங்களையும் இது தன்னகத்தே கொண்டுள்ளமையால் இளையோர்களிடத்தில் இக்கலையினை கொண்டுசெல்கையில் திசைமாறிச் சென்று கொண்டிருக்கும் இன்றைய இளந்தலைமுறையினரின் வாழ்வியலில் கலங்கரை விளக்கமாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

# 'வாய்முத்திம் சிந்திவிடுமோ!'

- ஞாலக்கோன் -

புலவர் ஒருவர் பல இன்னல்களோடு இருக்கிறார். புலவரல்லவா? அவரிடம் சரஸ்வதி இருப்பாள், ஆனால் இலக்குமி இருக்கமாட்டாளே! அதனால் அவருக்குப் பல குறைகள். குடும்பத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு அவரின் தலையிலேதானே இருக்கும். அப்படியான சூழலில், தன் குறைகளைத் தீர்த்து வைக்கும்படி இறைவனைக் கேட்கிறார். தனது ஊரில் உள்ள கோயிலில் இருந்து அருள்பாலிக்கும் இறைவனைத் தினமும் சென்று வணங்குகிறார். குறைகளைத் தீர்க்கும்படி மனமுருகி இறைஞ்சுகிறார். தாங்க இயலாத தனது துன்பங்களைப் பட்டியலிட்டுச் சொல்கிறார். ஒவ்வொரு நாளும் ஓயாது முறையிடுகிறார். பலநாள்களாக இந்தப் புலவரின் புலம்பல் தொடர்கிறது. அவர் தினமும் தொடர்ந்து இரந்தும் இறைவன் இவர்பால் இரங்குவதாகத் தெரியவில்லை.

இறைவன் அடியவர்களைச் சோதிக்கும்போது தனியாகவே தோன்றுகிறான். ஆனால் அவர்களை ஆட்கொள்ள, அவர்களுக்கு அருள வரும்போது அம்பிகையுடனேயே தோன்றி அருள்பாலிக்கிறான். திருஞானசம்பந்தர், இளையான்குடி மாறன், சிறுத்தொண்டர், திருநீலகண்டர் போன்ற அடியவர்களுக்கு அருளும்போது அம்மையுடன் இடபத்திலே தோன்றியல்லவா அருளியிருக்கிறான். இது பெரியபுராணம் சொல்லும் செய்தி.

சாதாரண வாழ்விலேகூட அன்னைதான் அத்தனைவிட அன்பு சொரிபவளாக இருக்கிறாள். பிள்ளைகள் தேவை வரும்போது தாய் மூலந்தான் தந்தையை அணுகுவது வழமை. இதற்கு விதிவிலக்கு இருக்கலாம். ஆனால் பொதுவழக்கில் தாய்தான் கருணை அதிகம் உள்ளவளாகத் தெரிகிறாள்; சித்திரிக்கப்படுகிறாள். அப்படிப் பிள்ளைகளின் தேவைகளைப்பற்றிக் கணவனிடம் தெரிவிக்கும்போது தாயானவள் தருணம் பார்த்தே கணவனை அணுகுவாள். கணவனின் அனைத்துக் குணங்களையும் அவள் ஆராய்ந்து அறிந்திருப்பாள். அதனால், கணவன் மகிழ்ச்சியாக இருக்கும்போதுதான் விடயம் சித்தியாகும் என்பதை அவள் அறிவாள்.

பொது வாழ்க்கையிலும் ஒரு தலைவரையோ அல்லது ஓர் அதிகாரியையோ அணுகவேண்டும், அல்லது அலுவல் பெறவேண்டும் என்றால் அவர்களை அவர்களின் மனைவியர் மூலமாகத் தொடர்புகொள்ளும் வழமை உள்ளதல்லவா?

இந்தமாதிரியான சிந்தனைகள் அந்தப் புலவருக்கும் தோன்றியிருக்கவேண்டும். அவருடைய மனதில் அந்த எண்ணம் உதிக்கிறது. அதனால் அன்னையை விழிக்கிறார். "அன்னையே! சிறந்த, தெரிந்தெடுத்த முத்துக்களாலான பந்தரின் கீழ் மெல்லிய படுக்கையில் நீ இருப்பாய். அப்போது சிவனார் உன் அருகில் வந்து முத்தம் தரும்படி கெஞ்சுவார்; கேட்பார். அப்படி அவர் மனம் இளகியிருக்கும் அந்த நல்ல மகிழ்ச்சியான தருணத்தில் என் குறைகளை எடுத்துச் சொல்லக்கூடாதா? தினம் தினம் ஒவ்வொன்றாக என் குறைகளை நீ சொன்னால் அவரிடம் என் குறைகளின் பட்டியல் சென்றடையும். அதை அவர் பார்த்து எனக்கு அருளுவார் அல்லவா? அப்படி நீ சொல்வதற்கு எது தடையாக இருக்கிறது? உன்னுடைய முத்தம் வீணாகிவிடுமா? இந்த ஏழைப் புலவனுக்காக ஒருகால் நீ இதைச் செய்யக்கூடாதா?" என்று இம்முறை அம்மையை இரந்து கேட்கிறார் அந்தப் புலவர்.

புலவரின் ஊர் திருநெல்வேலி. அவர் சென்று முதலில் தன் குறைகளைச் சொன்னது நெல்லையப்பரிடம். பின்னர் வேண்டுகோள் விடுத்தது காந்திமதி அன்னையிடம். புலவரின் பெயர் பலபட்டடை சொக்கநாதப் புலவர்.

அந்தப் பாடல்:

ஆய்முத்துப் பந்தரின் மெல்லணை மீதுன் அருகிருந்து
“நீமுத்தம் தா”வென்று அவர்கொஞ்சும் வேளையில் நித்த நித்தம்
வேய்முத்த ரோடென் குறைகளெல் லாம்மெல்ல மெல்லச் சொன்னால்
வாய்முத்தம் சிந்தி விடுமோ? நெல்வேலி வடிவன்னையே

ஆய்முத்து - தெரிந்தெடுத்த முத்து, வேய்முத்து - மூங்கில் முத்து
நெய்வேலி வடிவன்னை - காந்திமதி அம்மை

மெல்ல மெல்லச் சொல் என்கிறார் புலவர். வேகமாகச் சொன்னால் கவனிக்காது போகலாம், அல்லது ஏதாவது ஒரு வேண்டுதல் தவறிப்போகலாம், எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் சொன்னால் அதைத் தட்டிக்கழிக்கலாம் என்றெல்லாம் அந்த ஏழைப் புலவர் சிந்தித்தார்போலும். அதனால் தினம் தினம் கொஞ்சம் கொஞ்சமாகச் சொல் என்பதில் புலவரின் ஏக்கம், ஆதங்கம் தெரிகிறது. “வாய்முத்தம் சிந்திவிடுமோ” என்று அன்னையைச் செல்லமாகக் கண்டிக்கவும் புலவர் தவறவில்லை. இலக்கியச் சுவை இந்தத் தொடர்களில் இன்சுவையாக உள்ளது.

தனிப்பாடல் திரட்டில் வரும் இப்பாடல் இலக்கியச் சுவை நிறைந்துள்ளது மட்டுமன்றி அன்னைதான் அருளுபவள் என்ற உண்மையையும் எடுத்துச் சொல்கிறது. நம்முடைய உலக வாழ்விலும் சரி, ஆன்மிகத்திலும் சரி, அன்னையரே அருளுவதற்கு உரியவர்கள்; உதவுபவர்கள் என்ற தத்துவத்தை அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறது இந்தப் பாடல்.



## சோமாஸ்கந்த மூர்த்தம்

ஏல வார்குழல் இறைவிக்கும் எம்பிரான் தனக்கும்
பால னாகிய குமரவேள் நடுவுறும் பான்மை
ஞால மேலுறும் இரவொடு பகலுக்கும் நடுவாய்
மாலை யானதொன் றழிவின்றி வைகுமா றொக்கும்

அன்னைக்கும் அப்பனுக்கும் நடுவே குழந்தை முருகன் சோமாஸ்கந்த மூர்த்தியாக எழுந்தருளுகின்றான். உலக மாதாவாகிய உமையம்மையைப் பசுமை நோக்கி இரவுக்கும், எம்பெருமானைச் செம்மை நோக்கிப் பகலுக்கும் ஒப்பிட்டு, நடுவில் காட்சியளிக்கும் குமரவேளை மாலைக்காலமாக அநுபவிக்கிறார் கச்சியப்பர். மூவுலகில் தோன்றும் மாலை, மயக்கத்தை ஊட்டிச் சிறுபொழுதில் போகும். ஆனால் இந்த முருகனாகிய மாலைப்பொழுது ஆனந்தமூட்டி என்றும் அழிவின்றி இருக்கும். சிவன் சத்தாகவும், உமை சித்தாகவும், முருகன் ஆனந்தமாகவும் காட்சியளிக்கும் தோற்றமே சோமாஸ்கந்த மூர்த்தமாகும். எனவே சச்சிதானந்த பிழம்பே முருகன் என்பது தெளிவு.

நன்றி: கந்தபுராணச் சொற்பொழிவுகள்,
சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி

# குற்றாலம் - குற்றாலநாதர் ஆலயம்

## பயணக்கட்டுரை

சாவகச்சேரியூர் Dr க கதிர்காமநாதன்

குற்றாலம் தென் இந்தியாவில் பிரசித்தி பெற்ற சுற்றுலாப் பிரயாணம் செய்யுமிடமாகவுள்ளது. இதற்குக் காரணம் இங்குள்ள இயற்கை மலைத்தொடரும், காட்சிகளும், முக்கியமாக அருவி களுமே! தமிழ்த் திரைப்படத்தில் காட்டப்பட்டபின் குற்றாலம் அருவி மிகவும் பிரபலமாகிவிட்டது.



குற்றாலம் = குறு + ஆல் என்ற பெயர்களிலிருந்து உருவாகியது. ஆலமரங்கள் முன்பு அதிகமாக இங்கு இருந்ததால் இப்பெயர் உருவாகியது. சங்க காலத்தில் தேனூர் என அழைக்கப்பட்டது.

குற்றால அருவியிலே குளித்தது இன்று போல் இருக்கிறது. எமக்கும் நீராடிய பின்னர் ஒருவித பூரிப்பும் நிறைவும், ஆனந்தமும் கிடைத்தது.

அருவிகள்: தென்கச்சி மாவட்டத்தின் மேற்குத் தொடர்ச்சி மலைகளிலிருந்து தாமிரவருணி, குற்றாறு போன்ற நதிகள், ஒன்பது அருவிகள் வருகின்றன.

அருவிகள் :

1. பேரருவி - குற்றால அருவி எனக் குறிப்பிடப்படுகிறது. 288 அடி உயரத்திலிருந்து உற்பத்தியாகிறது.
2. சிற்றருவி - பேரருவிக்கு மேலே உள்ளது.
3. செண்பகதேவி அருவி - பேரருவியிலிருந்து 2 கி.மீ தூரத்திலிருந்து ஆரம்பிக்கிறது.
4. தேனருவி - செண்பகதேவி அருவிக்கு சற்று உயரத்தில் உள்ளது. பல தேன்கூடுகள் அருகே இருக்கின்றன.
5. ஐந்தருவி - திருகாட்டமலை உச்சியிலிருந்து விழுகிறது.
6. புலி அருவி.

7-8. பழைய குற்றால அருவி.

9. பாலருவி

இந்த அருவிகள் பல மூலிகைகள் தாவரங்கள் ஊடாக வருவதால், பல நோய் நொடிகளைக் குணப்படுத்தும் அருமருந்தாக இருக்கின்றன, - தென்னகத்து மருத்து நீர்; மருந்து நீர். எவரும் கட்டணமில்லாமல், இலவசமாக நீராடலாம். ஆனந்தமாக அநுபவித்து ஆட பெண்களுக்கும், ஆண்களுக்கும் தனித்தனி நீராட, உடுப்புக்கள் மாற்ற இட வசதிகள் உள்ளன. அருவிகள் அதிகரித்து, அபாயம் ஏற்படின் அறிவிப்புக்கள் கொடுக்கப்படுகின்றன.

குற்றாலநாதர் ஆலயம்:

இறைவன்: குற்றாலநாதர், குறும்பலா ஈசர், திரிகூடாசலபதி
இறைவி: குழல்வாய்மொழியம்மை, வேணுவாக்குவாகினி
தலமரம்: குறும்பலா
தீர்த்தம்: வட அருவி



சம்பந்தர், அப்பர் (திருவங்கமாலை), மாணிக்கவாசகர், பட்டினத்தார், அருணகிரிநாதர் ஆகியோரால் பாடல் பெற்றதலம்.

குற்றால தலபுராணம். குற்றாலக் குறவஞ்சி ஆகிய நூல்கள் இத்தலத்தைப் பற்றிக் கூறுகின்றன.

பிரயாணம்:

வழமைபோல் மோட்டார் வாகனமூலம் இந்த ஆலயத்தை அடைந்தோம். முதலில் ஆலயத்திற்கு அருகில் இருக்கும் பேரருவியில் நீராடச் சென்றோம். அங்கே மக்கள் நீராடிக் கொண்டிருந்தனர். ஏனையோர் நீராடிய பின்னர் எமது முறை வந்ததும் இருவருமாகச் சென்று நீராடினோம். என்னே அநுபவம்! சிறுவயதில் எனது தகப்பனார் கிணற்று நீரால் நீராட்டிய நினைவு. பல பிரபலங்கள் நீராடிய அருவியில் நாமும் நீராடினோம் என நினைக்கும் போது நமக்கும் ஒரு பூரிப்பு! முதன் முதல் இங்குதான் அருவியில் நீராடிய அநுபவம்; அந்த அநுபவம் புதுமை.

ஆலயம் சங்கு வடிவத்தில் அமைந்தது. மூன்று கலசங்களை உடைய கோபுரம். படிகள் மூலம் உட்சென்றால் விசாலமான மண்டபத்தை அடையலாம்.

விஷ்ணு வடிவத்தில் முன்பு இருந்த தோற்றத்தை அகத்தியர் சிவலிங்க மூர்த்தியாக்கிய தலம். அகத்தியரால் மாற்றப்பட்டதால் சிவலிங்கத்தின் மீது அவரது ஐந்து கைவிரல்களின் அடையாளம் காணப்படுகின்றது.

கிழக்கு நோக்கிய சிவனுக்கு வலப்பக்கமாக அம்பாள் குழல்வாய்மொழி அம்மையும், கிழக்கு நோக்கி அருள் பாலிக்கின்றார். வேறு பல மூர்த்தங்களும் இங்கே இருக்கின்றன.

சித்திரசபை:
ஆலயத்திற்கு அருகில் தனியாக அமைந்துள்ளது. எதிரில் தெப்பக்குளம். அதன் நடுவில் மணிமண்டபம். உட்சென்றால் சபாமண்டபம். இங்கு குறவஞ்சி சிலைகளின் அருமையான காட்சி. விமானம் எட்டுக் கலசங்களைக் கொண்டது. சபையின் உட்சுற்றில் துர்க்கையின் பலவித தோற்றங்கள், கஜேந்திர மோட்சம், திருவிளையாடற்புராண வரலாறு, அறுபத்து மூவர் தோற்றங்கள் வண்ணத்தில் உள்ளன. காலப்போக்கில் சிதைந்தது போல் இருக்கின்றன.

சபையின் உள்ளே நடராசர், சிவகாமியுடன் இருக்கும் போது தேவர்கள் வணங்குவது அழகாக சித்திரமாக இருக்கின்றது. வேறு தெய்வங்களும் உள்ளன.

பி.குறிப்பு: தலமரம் குறும்பலா. சுளைளைப் பார்த்தால் தோற்றத்தில் சிவலிங்க வடிவில் உள்ளன. குற்றாலக் குறவஞ்சி தமிழ் சிறு இலக்கியத்தில் புகழ் பெற்றது.

ஆடி, ஆவணி மாதங்கள் குற்றாலத்தில் நீராடி ஆலய தரிசனம் செய்வதற்கு உகந்த மாதங்களாகும்.

காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே
பாலுண் கடைவாய்ப் படுமுன்னே - மேல்விழுந்தே
உற்றார் அழுமுன்னே ஊரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு!

- பட்டினத்தார்

பேருந்து வசதிகள் தாராளமாக உள்ளன.
செங்கோட்டை, தென்காசி - தொடர் புகையிரத சேவை.
விமான நிலையம் - தூத்துக்குடி



பஞ்ச சபைகள்:
கனகசபை - சிதம்பரம் - ஆனந்த தாண்டவம்
வெள்ளி அம்பலம் - மதுரை - சந்தியா தாண்டவம்
இரத்தின சபை - திருவாலங்காடு - காளி தாண்டவம்
சித்திர சபை - குற்றாலம் - திரிபுர தாண்டவம்
தாமிர சபை - திருநெல்வேலி - முனி தாண்டவம்

# விநாயகர் துதிகள்

பண்ணியம் ஏந்தும் கரந்தனக்கு ஆக்கி
பால்நிலா மருப்பமர் திருக்கை
விண்ணவர்க்கு ஆக்கி அரதனக் கலச
வியன்கரம் தந்தைதாய்க் காக்கி
கண்ணில் ஆணவவெங் கரிபிணித் தடக்கிக்
கரசினேற் கிருகையும் ஆக்கும்
அண்ணலை தணிகை வரைவளர் ஆபத்
சகாயனை அகந்தழீஇக் களிப்பாம்



மண்ணுல கத்தினில் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்

உச்சியின் மகுடம் மின்ன ஒளிர்தர நுதலி னோடை
வச்சிர மருப்பின் ஒற்றை மணிகொள் கிம்புரி வயங்க
மெய்ச்செவிக் கவரி தூங்க வேழமா முகம்கொண் டுற்ற
கச்சியின் விகட சக்ர கணபதிக் கன்பு செய்வாம்



வானுலகும் மண்ணுலகும் வாழ மறைவாழ
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி அஞ்சலி செய்கிற்பாம்

எடுக்கு மாக்கதை இன்தமிழ்ச் செய்யுளாய்
நடக்கு மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடை தாள்செவி நீண்முடி
கடக் களிற்றைக் கருத்துள் இருத்துவாம்

பவளமால் வரையில் நிலவெறிப் பதுபோல்
 பரந்த நீற்றழகு பச்சுடம்பில்
திவள மாதுடன் நின்றாடிய பரமன்
 சிறுவனைப் பாரதப் பெரும் போர்
தவள மாமருப்பு ஒன்றொடித்தொரு கரத்தில்
 தரித்துயர் கிரிப்புறத்து எழுதும்
கவள மாகளிற்றின் திருமுகம் படைத்த
 கடவுளை நினைந்து கைதொழுவாம்





5 Star
FOOD HYGIENE RATING
5
VERY GOOD
HALAL
Royal thali .co.uk
AUTHENTIC INDIAN CUISINE
Royal Thali Restaurant
Taste of Tradition
deliveroo
JUST EAT
Uber Eats
Opening Hours
Mon-Sun: 10 AM - 10 PM
Email:
customercare@royalthali.co.uk
Google
100 HIGH STREET, BARKINGSIDE, IG62DR
020 3500 8100
075 9810 0100

உ

# சிவயோகம்
# SIVAYOGAM
(Charity Reg No: 1050398 Since: 1995)





## இந்து கலாசார மையம்
## அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில்

128, Aurelia Road, Croydon CRO 3BF. Tel: 020 8767 9881









சைவப் பெருமக்கள் அனைவருக்கும் வணக்கம். உங்கள் அனைவருக்கும் அம்பாளின் அருள் கிடைக்க எல்லாம் வல்ல இலண்டன் அருள்மிகு முத்துமாரி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம். அம்பாளின் அருளாலும், அடியார்களின் நன்கொடைகளாலும் அம்பாளுக்கு ஆலயம் அமைப்பதற்கான இடம் “சிவயோகம்” அறக்கட்டளைக்குச் சொந்தமாக வாங்கப்பட்டுள்ளபோதிலும் பணப் பற்றாக்குறை காரணமாக ஆலயம் அமைக்கும் பணி தாமதமாகிறது. அம்பாளுக்கு ஆலயம் அமைக்கும் வேலையைத் துரிதப்படுத்துவதற்கு அடியார்கள் தங்களால் ஆன உதவியைச் செய்யுமாறு தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றோம். தங்கள் நன்கொடையை ஆலயத்தில் நேரடியாகப் பணமாகவோ அல்லது காசோலையாகவோ அல்லது வங்கியூடாகவோ வழங்கலாம்.

வங்கிக் கணக்கு விபரம் Name: SIVAYOGAM BUILDING FUND | Account No: 20057541 | Sort Code:- 20 21 78| Bank: BARCLAYS

நன்றி

ஆலய நிர்வாகத்தினர்

Muththumari Amman Temple Sivayogam



"Ammanai Saran Addainthal Athika Varam Peralam"

## SHRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST

Founded on 10-08- 1991 Charity No: 1014409

5 CHAPEL ROAD LONDON W13 9AE. TEL: 020 8810 0835/020 8840 0485

www.ammanealing.org Email: info@ammanealing.org

## அம்பிகையின் திருவருளை பெற

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்த குழந்தைகள் மற்றும் ஆதரவற்ற முதியவர்களுக்கு

# அன்னதானம் செய்ய அரிய வாய்ப்பு




உங்கள், குழந்தைகள் மற்றும் பெற்றோர்களின்
பிறந்தநாள், திருமணநாள், நினைவு நாள் மற்றும்
உங்கள் இல்ல சிறப்பு விழா தினங்களில்

## அன்னதானம் செய்யலாம்...

உங்களின் £100 பங்களிப்பு
பல பேரின் வயிறு நிரம்பி மனம் குளிரும்....
இப்புனிதப் பணியில் கைகோர்க்கும் அடியவர்களுக்கு
உதவுவதற்கு தாயாராக இருக்கின்றோம்.
(அன்னதானம் கொடுக்கும் நிகழ்வு தின
புகைப்படம் மற்றும் காணொளி உங்களுக்கு கொடுக்கப்படும்)

**YOU CAN CONTRIBUTE FOOD**

**DONATION £100** NO ADMINISTRATION CHARGES

**to Orphanages or Elders Home in Sri Lanka**

on Your Birthday, Wedding Day
Remembrance Day
or Any Other Special Function




**We will be providing Photos & Video of the event to you**

**Bank Details: SKTA Temple Trust**

**LLOYDS BANK | SORT CODE: 30-98-91 | ACCOUNT NO: 06905358**

## அன்னையின் பணியில் இணைந்திடுங்கள் அவள் அருளைப் பெற்றிடுங்கள்

**Please donate as much as you can!**



SURYA JEWELLS
"உண்மை வெல்லும்"
நியாயமான வட்டி வீதத்தில்
தங்க நகைகள் அடகு பிடிக்கப்படும்
விதவிதமாய் வித்தியாசமான டிசைன்கள்
உங்கள் அழகிற்கு அழகூட்டிடும்
பழைய பவுண்களைக் கொடுத்து
புதிய நகைகளை வாங்கலாம்
அதுமட்டுமல்ல
நீங்கள் செய்யும் ஆடர்கள்
குறித்த நேரத்தில்
செய்து தருவதில் வல்லுநர்கள்
அதி குறைந்த வட்டி வீதத்தில்
வாரத்தில் 7 நாட்களும்
அடகு பிடிக்கப்படும். (2.5%)
மலிவான விலையில்
தரமான தங்கத்திற்கு
Eastham ல்
சூரியா ஜுவல்ஸ்
உங்கள் நகைகளை வேறு இடத்தில் கூடிய வட்டி வீதத்தில் அடகு வைத்திருந்தால்
எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.
Tel: 020 8552 2224
292 High Street North, London E12 6SA

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

## விசேட நாள்கள்

### ஏப்பிரில் (28-04-2026) தொடக்கம் ஜூலை (11-07-2026) வரை

| | | |
|---|---|---|
| *28.04.2026* | செவ்வாய் | பிரதோஷம் |
| *01.05.2026* | வெள்ளி | சித்திரைப் பூரணை |
| *09.05.2026* | சனி | நடேசரபிஷேகம் |
| *11.05.2026* | திங்கள் | திருநாவுக்கரசர் குருபூசை |
| *14.05.2026* | வியாழன் | பிரதோஷம் |
| *21.05.2026* | வியாழன் | சேக்கிழார் குருபூசை |
| *28.05.2026* | வியாழன் | பிரதோஷம் |
| *02.06.2026* | செவ்வாய் | திருஞானசம்பந்தர் குருபூசை |
| *12.06.2026* | வெள்ளி | பிரதோஷம் |
| *13.06.2026* | சனி | சிதம்பரேஸ்வரர் கொடியேற்றம் |
| *19.06.2026* | வெள்ளி | மாணிக்கவாசகர் குருபூசை |
| *21.06.2026* | ஞாயிறு | தேர்த்திருவிழா |
| *22.06.2026* | திங்கள் | ஆனித்திருமஞ்சனம் நடேசரபிஷேகம் |
| *26.06.2026* | வெள்ளி | பிரதோஷம் |
| *11.07.2026* | சனி | பிரதோஷம் |

பிரதோஷ காலத்தில் ஆலயத்தில் விசேஷ பூசை, வழிபாடுகள் நடைபெறுகின்றன.

கோயில் திறந்திருக்கும் நேரம்:

காலை: *8.30* மணிமுதல் *13.00* மணிவரை
மாலை: *5.00* மணிமுதல் *9.00* மணிவரை

ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேசுவரப் பெருமானை வழிபட்டுத் திருவருள் பெற்று உய்யுமாறு அடியார்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# SAIVA SCHOOL OF HINDUISM

(By late S. Shivapathasundaram B.A)

## CHAPTER 6
## MAYA (மாயை)

(Continues from last issue)

### The Constituents of the Physical Body

We have so far analysed the tools of the soul that are not found in the physical body, which is itself a product of Maya. Saiva philosophy holds that the body is composed of five elements, called Bhutas, which also forms the physical universe. These elements are made of still simpler ones, called Tanmatras, also five in number. They are supposed to assist the sense organs in differentiating sensations. The Tanmatras, along with the mental organs, form a subtle body in the same way as the five elements form the physical body.

It is now possible to give an account of the evolution of the mental organs, the sense organs, and the two kinds of elements, the Bhutas and Tanmatras. All these come ultimately from a substance called Mulaprakriti (ultimate origin), which evolves into a product called Guna (quality). This is a neutral synthesis of three qualities, which may roughly be called sentience (Satva), motion (Rajas), and insentience (Tamas). All mental and physical products are varying compounds of these three qualities. It must be remembered in this connection that Saiva philosophy considers an object to be nothing more than an aggregate of qualities, and that therefore all things, whether mental or material, are to be regarded as only bundles of qualities.

Tanmatras



The first evolute of Guna is the intellect (Buddhi), which comes with a large proportion of sentience (Satva). From this evolves the will (Ahankara) which is predominantly rajasic (motion), and causes action. It has to come from the intellect, perhaps because conation can come only after the decision of the intellect. (The conative decision “I will do this" has to follow the intellectual decision "It is desirable to do this”.) From the will comes the Manas (apprehension) and the sense organs, possessing a large proportion of sentience.

The work of the Manas is to catch sensations and to attach itself to things that interest it. Its main activity is thus one of motion, and it must therefore be derived from the will. But as it is concerned with thinking, there is a large proportion of sentience in it. The tools of action are derived also from Ahankara (will), with a very large proportion of Rajas (motion), while the Tanmatras (the subtle elements) come from it with a large proportion of insentience. As they are derived from Ahankara, they are in continual motion.

We have thus been introduced to twelve new products, the five Bhutas, the five Tanmatras, the Guna, and the Mulaprakriti. Saiva philosophy makes a total of thirty six by adding six others. One of these is the empirical ego, which is the soul's self-consciousness gained by it when it is able to know, to desire, and to do. The remaining five consist of the different forms into which the energies of knowing and doing are supplied to the abilities of the soul. They are (1) energy to know, (2) energy to do, (3) energy to know and to do in equal proportions, (4) more of energy to do and less of energy to know, and (5) more of energy to know and less of energy to do, called respectively, Nada, Bindu, Sadakya, Ishvara, and Shuddha Vidya.

## Varying Tools of Living Beings

These thirty-six products of Maya may be divided into three sections. The first of these supplies energy to the soul for its activities of knowing, desiring, and doing. The second consists of two parts, one of which regulates the flow of energy and the other counteracts the constriction of Anava. The third section consists of mental and superphysical tools and the constituents of the body. All living beings are supposed to be endowed with the same thirty-six products, but differ largely in the sensory and motor mechanisms of the physical body. Some animals as well as some men have fewer mechanisms of sense than five. Plants are supposed to possess only the sense of touch.

We are taught that the evolution of the human body from the protoplasm has been continuous. If, therefore, man has a soul, there is no reason why an animal or a plant should not have one.

When a man is said to die, it is only his body that perishes. There is nothing to show that the mental tools also disappear. They are intimately connected with the soul and are in no way dependent on the body. Therefore, we have to infer that they remain with the soul and are not impaired or removed by the removal of the physical body.

## Other Worlds and Beings

The products of Maya enter into combination to form not only bodies but also worlds. We are aware of the existence of solid worlds like our own and burning, gaseous worlds like stars.

There should be liquid and semi-solid worlds, between the gaseous and solid states, in the process of evolution. It may seem impossible that the stars are inhabited. But there are living beings in this world that are capable of living in temperatures varying from near the boiling point to below the freezing point. The possibility of life in such a wide range of temperature permits us to infer the existence of living beings in much higher and lower temperatures. Besides, living beings should not be necessarily restricted to the types we are familiar with in this world, and bodies formed of substances different from those of our own may exist in other worlds. There is nothing to prove or indicate that the existence of such living beings is impossible.

Saiva philosophy  the existence in this world itself of beings called ghosts and spirits having light bodies formed of the same five elements, It also speaks of worlds formed of the substance of the mind and of even higher products of Maya inhabited by beings having mental and similar bodies.

The mental tools, with the Tanmatras, form the subtle body, which is the basis of the next physical body.

New worlds are ever in the making and old worlds are in the process of disintegration. It is said that a time will come when the whole universe will vanish by a process of involution into Maya.


## Classification of the Products

It may be useful here to give in a systematic and compact form the thirty-six products that have come from Maya. Maya consists of two parts, the first of which supplies energy and the second the tools. The first part evolves in succession into Nada, Bindu, Sadakya, Ishvara, and Shuddha Vidya. The cause of evolution is the Love of God. The second part consists of two sections, the regulators and the tools. The regulators are Kala, Niyati, Kala, Vidya, and Raga. To these are added the Empirical ego and Mula prakriti. The tools evolved from Mulaprakriti consist of:

(a) Guna, Buddhi (intellect), Ahankara (will), and Manas (aspect of the mind).
(b) The five organs of sense.
(c) The five organs of action.
(d) The five elements (Tanmatras).
(e) The five Bhutas.

The evolution of the products is shown in the next page in the form of a table.

## 36 Tattvas




| Jñānendriyas (Sense Organs) | Karmendriyas (Organs of Action) | Tanmātras (Subtle Elements) | Mahābhūtas (Gross Elements) |
|---|---|---|---|
| 17. Śrotra (Ear) | 22. Vāc (Voice) | 27. Śabda (Sound) | 32. Akāśa (Space) |
| 18. Tvac (Skin) | 23. Pāṇi (Hand) | 28. Sparśa (Touch) | 33. Vāyu (Wind) |
| 19. Cakṣus (Eye) | 24. Pāda (Foot) | 29. Rūpa (Form) | 34. Tejas (Fire) |
| 20. Rasanā (Tongue) | 25. Upastha (Genital) | 30. Rasa (Taste) | 35. Āp/Jala (Water) |
| 21. Nāsikā (Nose) | 26. Pāyu (Anus) | 31. Gandha (Smell) | 36. Pṛthivī (Earth) |

# வைகாசி மாத நினைவுகள்

க செல்வரத்தினம்

கைகால் நுடங்கியும் கண்பஞ் சடைந்தும் ஈகாகம் கொத்தி
மெய்தான் அழுகியும் மாள்வோரைக் கண்டு மிகவும் நொந்தேன்
உய்கினோ ஓவென்று உழலுகின் றேன்நீ உளமிரங்கி
வைகாசி எல்லாம் வருவாய் மதுரை மனோன்மணியே - அகத்தியர்

வைகாசி மாதத்தில் பூரணை விசாக நட்சத்திரத்துடன் கூடி வருவதால் முருகப் பெருமான் விசாகன் எனப்படுகின்றார். சித்திரையும் வைகாசியும் இளவேனிற் காலமாகும் . இளவேனிற் காலத்தில் ஈழத்திலும் தமிழகத்திலும் பல கோயில்களில் பூசை விழாக்கள் நடைபெறுகின்றன. காளி, துர்க்கை, கண்ணகை அம்மன் போன்ற ஊர்த் தெய்வங்களுக்கு வழிபாடுகள் நிகழும். திருச்செந்தூரில் நடக்கும் பெருவிழா முக்கியமானது. கிராமக் கோயில்களில் கூழ் ஊற்றும் விழாவும், கஞ்சியூற்றும் விழாவும் நடைபெறகின்றன.. கிராமங்கள்தோறும் தெருக்கள் தோறும் கூத்தாடிகள் பெண்வேடம் தாங்கி வெளிப்படுத்தும் காட்சிகள் உளம் உருக்குபவையாகும். புத்தர் பெருமான் பிறந்ததும் ஞானம் பெற்றதும் பரி நிர்வாணம் அடைந்ததும் வைகாசி மாத நட்சத்திர நாளாகும். பௌத்தர்கள் விளக்குக் கூடுகள் ஏற்றிக் கொண்டாடுவர்.

**இடப விரதம்:**

வைகாசிமாத வளர்பிறை அட்டமி இடபாரூரடராகிய சிவனுக்குரிய நாளாகும். உணவருந்தாது கடைப் பிடிக்கும் விரத நாளாகும். இரவில் தீர்த்தம், நீர், பால், இளநீர் போன்ற நீராகாரத்தை உட்கொள்ளலாம்

**சுக்கிரவாரம்:**

விநாயகரைக் குறித்துச் செய்யும் விரதமாகும். வைகாசிமாத வெள்ளிக்கிழமை நாள்களில் ஆலய தரிசனம் செய்யுமுன் காலைக் கடனை முடித்து, திருமுறை ஓதல், புராணம் படித்தல் கேட்டல் சமூகத் தொண்டு செய்தல் உத்தமமாகும்.

**திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்:**

அன்பை அடிப்படையாகக் கொண்டது சைவசமயம். திருஞானசம்பந்தப் பெருமான் எம் பெருமானுக்கும் சமுதாயத்திறகும் தொண்டாற்றியது புலனாகும். தம் வாழ்வில் நிகழ்த்திய அற்புத நிகழ்ச்சிகள் பின் வருவன:

1 தம் மூன்றாம் வயதில் இறைவனின் அருட்காட்சி கண்டு ஞானப்பால் உண்டு தேவாரத் திருப்பதிகம் பாடினார்

2. கொல்லிமழவன் மகளின் முயலகன் நோயைத் "துணிவளர் திங்கள்" என்னும் பதிகம்பாடி அதனை நீக்கியவர்

3 “சதுரம் மறை தான் துதிசெய்து” என்னும் தேவாரம் பாடித் திருமறைக்காட்டு கோயிற் கதவம் மூடச் செய்தார்.

4. திருமருகலில் பாம்பு தீண்டி இறந்த வணிகனை “சடையாய் எனுமால்” பதிகம்பாடி உயிரப்பித்தார்.

5. மதுரையில் தங்கி இருந்த போது, அமணர்கள் மடத்திற்கு நெருப்பு ஊட்ட “பையவே சென்று பாண்டியற்காகவே” என்று பாடி, மங்கையர்க்கரசியாரின் மாங்கலயத்தைக் காத்தும் மன்னனது வெப்பு நோயை “மந்திரமாவது நீறு” என்னும் பதிகம் பாடியும் குணப்படுத்தினார்.

6 “தளிரிள வளரொளி” பதிகம்பாடி, சமணருடன் ஏற்பட்ட அனல் வாதத்தில் ஏடு எரியாமல் காப்பாற்றினார். அத்துடன் புனல் வாாதத்தில் “வாழ்க அந்தணர்” பதிகம் பாடி ஆற்றிலிட்ட ஏட்டை எதிர்வரச் செய்தார்.

7 போதிமங்கைப் பதியில் பௌத்தர்களை வாதில் வென்று அவர்களை நீறணியைச் செய்வித்தார்.

8 திருவோத்தூரில் குரும்பை ஆண்பனையை, “பூத்தேர்ந்தாயன” என்ற பதிகம் பாடிப் பெண்பனை ஆக்கினார்; காய்க்கச் செய்தார்.

9 திருமயிலையில், சிவநேசச்செட்டியார் மகள் அரவந்தீண்டி இறக்க, அவளின் எலும்பையும் சாம்பலையும் கண்டு “மட்டிட்ட புன்னை” பதிகம் பாடி உயிர்ப் பெறச் செய்தார்.

**சீர்காழி - குழந்தை**

சோழர் துதித்து சைவம் வளர்த்த சோழநாட்டில் ஊழிக்காலத்திலும் தோணி போல மிதந்த தொன்மைச் சிறப்புடையது சீர்காழி. பிரமபுரம், சீர்காழி, தோணிபுரம், புகலி, வெங்குரு, பூத்தராய், சிரபுரம், தோணிபுரம், புறவம், சண்பை, கொச்சைவயம், கழுமலம் என இதற்குப் பன்னிரண்டு திருப் பெயர்கள்.

அந்தணர் குல சிவபாதவிருதயர் திருமிகு பகவதி அம்மையார் தம்பதியினர் குழந்தை வரம் வேண்டித் திருக்காழியூர் திருத்தோணியப்பரை வேண்ட, திருவாதிரை திருநாளில் தென்னாடு செழிக்க குழந்தை பிறந்தது. அகவை மூன்றில் அம்பலத்தாடுபவனிடம் இவருக்கு அன்பு பிறந்தது. தந்தையார் தீர்த்தம் ஆடப் புறப்பட, குழந்தையும் அடம் பிடிக்க, தோளில் சுமந்து சென்றார். பிள்ளையைக் கரையிருத்தி, சிவபாதவிருதயர் திருக்குளம் இறங்கி நீரில் மூழ்கினார். கண்ணெதிரில் தந்தையைக் காணாததால் கலங்கியது பிள்ளை.

கண்மலர்கள் நீர் ததும்பக் கைம்மலர்களால் பிசைந்து
வண்ணமலர்ச் செங்கனிவாய் மணிஅதரம் புடைதுடிப்ப
எண்ணில் மறை ஒலிபெருக எவ்வுயிரும் குதூகலிப்பப்
புண்ணியக் கன்று அனையவர்தாம் பொருமி அழுதருளினார்.

- பெரியபுராணம்

அம்மே! அப்பா! என அழைத்தார். இறைவன் பார்வதி பக்கத்திருக்க விடைமேல் ஏறி விரைந்தார் குளக்கரையில் “பொற் கிண்ணத்தில் விரைந்து பாலூட்டுவாய்” எனப் புரிசடையான் உரைத்ததும் உமையம்மை சிவஞானமாகிய இன்னமுதத்தை ஊட்டினாள். தீர்த்தம் ஆடித் திரும்பிய சிவபாதவிருதயர் குழந்தையின் வாயில் பால் வடிவதைக் கண்டார். எச்சில் கலந்த பாலை ஊட்டியவர் யாரென அதட்ட, கண்ணீர் சொரிய அவர் கை நீட்டினார். அருட்காட்சி தந்த அம்மை அப்பனின் காட்சி நோக்கி “தோடுடைய செவியன்” எனப்பாடினார்.

தோணியப்பரை நினைத்து அன்றிரவு குழந்தை தூங்கி எழுந்ததும் திருக்கோலக்கா சென்று “மடையில் வாளை” எனத் திருப்பதிகம் பாட, திருவருளால் பொற்றாளம் கிடைத்தது. அந்நாளில், திருநீலகண்ட யாழப்பாணர் தமது மனைவி மதங்க சூளாமணியுடன் அவரரைக்காண சீர்காழி வந்தார். பிள்ளையார் அருளிய திருப்பதிகங்ளை யாழில் வாசித்துக்காட்டினார். அன்று தொடக்கம் சம்பந்தரைப் பிரியாது தொண்டாற்றி வந்தார்.

திருநெல்வாயில் அரத்துறையில் முத்துச் சிவிகையும் முத்துச் சின்னமும் முத்துக்குடையும் கொடுக்குமாறு அந்தணரின் கனவில் இறைவன் சொல்ல அவற்றை வாங்கிக் குழந்தைக்கு கொடுத்தனர். “புண்ணிய பதினா றாண்டு பேர்பெறும் புகலி வேந்தர்” என இவர் வாழ்ந்த காலத்தைச் சேக்கிழார் பதிவு செய்கிறார். அவர் பாடிய தேவாரங்கள் திருக்கடைக் காப்பு எனப்படும். திருமுறைகள் ஓதுவார் தொல்வினைகள் தீர்ந்துவிடுமென்கிறார்.

> “ஒரு நெறிய மனம் மனம் வைத்துணர் ஞானசம்பந்தன் உரைசெய்த
> திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே”

திருவீழிமிழலையில் அடியவர்களுக்கு அமுது வழங்கக் காலதாமதம் ஏற்பட்டது. திருநாவுக்கரசர் வாசி தீரும் காசு பெற, இவருக்கோ கிடைத்த பொற்காசு வாசியுடைய காசு. எனவே “வாசிதீரவே காசு நலிகுவீர்” எனப் பதிகம் பாடி வாசியில்லாக் காசு பெற்று வசதியற்றோருக்கு உதவினார்.

சம்பந்தப் பெருமானுடைய பதிகங்களை யாழில் இட்டு வாசித்தவர் திருநீலகண்ட பெரும் பாணர் “மாதர்மடப் பிடியும் மட அன்னமும்” எனத் தொடங்கும் பதிகத்திற்கு தமது யாழில் இசை அமைக்க முடியாமையினால் யாழை உடைக்க முற்பட்டார். “சிந்தையால் அளவுபடா இசைப் பெருமை இறைவன் பெருமை” எனக்கூறி அவரைச் சம்பந்தர் சமாதானப் படுத்தினார்.

ஈழநாட்டிலுள்ள தீருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் தலங்கள் மீது பதிகமும் பாடியுள்ளார். மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச் சிறையாரும் அமணர் இருளகற்ற ஞானஒளி பரப்பும் சம்பந்தப் பெருமானைக் கண்கள் களிகூரக் கண்டனர். இதைச் சேக்கிழார் பெருமானது பாசுர வாயிலாக அறிகிறோம்.

> ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
> வானத்தின் மிசையன்றி மண்ணின்வளர் மதிக்கொழுந்தைத்
> தேனக் கமலர்க் கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்குங்
> கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.
>
> \- பெரியபுராணம்.

திருநல்லூர் பெருமணம் : திருமணம் செய்யச் சென்றார். . ஐந்தெழுத்தோதி, முத்துச் சிவிகை ஏறி, திருமணப்பந்தர் அடைந்தார். “நல்லூரப் பெருமணம்” என்னும் பதிகம் பாடினார்.

“அம்மை அப்பனே உன் திருவடி நீழலை அடையும் சமயம் இது. அதுவே விருப்பமென” சம்பந்தப் பெருமான் வேண்டினார். “ஞானசம்பந்தனே! நீயும் மனைவியும் திருமணங்காண வந்த மக்களும் இச்சோதியினுள்ளே வந்துசேருங்கள்” என்றார் சிவபெருமான். திருநீலநக்க நாயனார், முருக நாயனார், சிவபாதவிருதயர், நம்பியாண்ட நம்பி, தீருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார், திருத்தொண்டர்கள் தங்கள் மனைவிமார்களுடன் சிவசோதியை வலம் வந்து, அதனுள் நுழைந்து இரண்டறக் கலந்தனர்.

சம்பந்தருக்குத் தனிக் கோயில் தஞ்சை மாவட்டத்தில் ஒறுத்தநாடு வட்டத்தில் தேய்க்கரும்பன் கிராமத்தில் உள்ளது.

வைகாசிமாதத் திருத்தொண்டர் திருநாள்கள்:

| | |
|---|---|
| பரணி | - கழற்சிங்க நாயனார் |
| பூசம் | - நமிநந்தி அடிகளார் |
| பூசம் | - சேக்கிழார் பெருமான் |
| ஆயிலியம் | - சோமாசிமாறர் நாயனார் |
| மூலம் | - திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் |
| மூலம் | - முருக நாயனார் |
| மூலம் | - திருநீலநக்க நாயனார் |
| மூலம் | - திருநீலகண்ட யாழ்ப்பாணர் நாயனார் |

# விதியும் மதியும்

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்

என்று வள்ளுவர் சொன்னார்.

பலர் விதி பெரிதா, மதி பெரிதா என்று சந்தேகப்படுகிறார்கள். “விதியை மாற்ற யாராலும் முடியாது” என்று ஒரு சாரார் சொல்ல, மற்றொரு சாரார், “இல்லை, விதியை மதியால் வென்றுவிடலாம்” என்று சொல்கிறார்கள். இந்த இரண்டில் எது உண்மை?

விதியை மதி வெல்லுமேயன்றிக் கொல்லாது. விதியைக் கொல்வது வேறு; வெல்வது வேறு. கொல்வதாவது அடியோடு அழித்துவிடுவது. விதியை அடியோடு அழித்து ஒழிக்க யாராலும் முடியாது. விதி என்பது பிராரப்தம். பிராரப்தத்தை யாராலும் கொல்ல முடியாது. ஆனால், தெளிந்த அறிவு இருந்தால் வென்றுவிடலாம்.

எவ்வளவுதான் மதி உடையவன் ஆனாலும் வீசுகின்ற ஊதல் காற்றையும், பனியையும் அழிக்க முடியாது. ஆனால் கம்பளி உடை அணிந்துகொண்டு அவற்றின் கடுமையைக் குறைத்துக்கொள்ளலாம்.

நன்றி: கந்தரலங்காரச் சொற்பொழிவுகள், கி. வா. ஜ

# THE GLORIES, GRACE, AND MESSAGE OF SAGE YOGASWAMY

## - PROFOUND JNANA GURU!

By Sellappah Selvapaskaran

Present state of the world! If we can mentally stand back and take a look at Yogaswamy and the world we see it in today's troubled times, it can be said that Yogaswamy's efforts are to raise human consciousness to a new level, lifting Mankind above the mire of ignorant selfishness and setting up vision and understanding that will revolutionise the human lifestyle. Yogaswamy's main message is to remind us of our identity. Is the "atman" (soul within every living being) the core concept is that the true self, atman, is eternal and exists forever. However, this individual soul is typically bound to a continuous cycle of birth, life, death, and rebirth called samsara. The physical body is temporary, but the soul exists forever. This human form is one in which every divine entity and divine principle ascribed by man to god are manifest. How can we achieve divinity?

Na thapasmi na theerthaanaam
Na sasitharaanaam nam
Iapaaanpi samsara asgorthathaaram
Sajjanasevanam vinna

Neither penances nor baths in sacred waters the study of scriptures, nor through meditation, can the ocean of samsara be crossed without rendering service to humanity, wearing safron robes, or whatever pilgrimages we may undertake; our hearts hanker only after worldly objects and hence no cleansing of the heart occurs, the individual quest for liberation (mukti) is self-centred. This is not right. One should strive to help others, also to achieve liberation that is true service without expecting any reward or prominence or prestige! Few have such large hearted approach today.

Siddha Yogaswamy- Profound Jnana Guru, Who Planted God Consciousness through his Gospel Natchinthanai!

SriLanka's sage Yogaswamy, a perfect siddha yogi, was revered equally by the Hindus and Buddhists. He articulated his teachings called "Natchinthanai" or mahavakyam, containing 418 pages. He urged us to call all, "to know thyself by thyself! In the "Guru-Shishya" tradition, spiritual initiation "diksha" by a qualified guru is a necessary pre-requisite to achieve liberation, as diksha establishes a crucial link with the Guru and the Divine, without which spiritual practices may not bear fruit! Therefore, one who seeks a spiritual path needs to seek a guru who is unbroken. Lineage born of Jiva himself! Yogaswamigal's guru is Chellappah Swamy. The Sadguru of Chellappah Swamy was Kadait Swamy. Chellappah Swamy was a public relations officer in Jaffna Kachcheri, and on several occasions, he was entrusted with the Jaffna Kachcheri treasury. But he was irresistibly drawn towards "jnanam surged and outflowed outwardly! He appeared like a mad person. Kadait Swamy visited

Chellappah Swamy, who was often watching over his sishya's meditation. Kadait Swamy and Chellappah Swamy were often seen marching together through the villages, going nowhere on purpose!

Priests tried to exorcise the spirits! Chellappah Swamy was unmoved by all the fuss. In a very short time, Kadait Swamy carried him to the heights of God's realisation. After Kadait Swamy's departure from the earth plane, Chellappah Swamy lost behaving like a mad man!

Yogaswamigal first met with his guru Chellappah Swamy when he was on foot passing "Nallur KandaSwamy Temple Chariot Park". Chellappah Swamy, with his spiritual guidance, was able to reconstruct Yoga Swamy's ripeness and maturity in him. Chellappah Swamy called Yoga Swamy and said, "I was waiting for you." Yoga Swamy became the spiritual heir of Chellappah Swamigal and continued to transmit the illumination of Siva consciousness to the devotees who sought his guidance!

Yoga Swamy had many devotees. Yoga Swamy completed the first first initiation of his disciple Markandu Swamy, who reached the mature state and surrendered at Yoga Swamy's feet at the ashram. Yoga Swamy was already at Kaithady on 25th December 1950. Yoga Swamy, since 1918, was involved in meditation and spiritual insights, while Markandu Swamy was serving as a surveyor in Diyatalawa.

Yoga Swamy continued to guide by providing the required experience, which was necessary at every stage of his life, while Markandu Swamy was performing his family and community duties. Yoga Swamy's divine grace captured him and protected Markandu Swamy to lead a simple life, without any external show. Yogaswamigal used to visit Markandu Swamy once per year in Diyatalawa, where Markandu Swamy was serving as a surveyor. His principles and the format allowed Markandu Swamy to engage in a spiritual journey without any publicity during his professional life. Yoga Swamy continued to guide him by providing the experience necessary at every stage of his life; thus, Yoga Swamy's grace formed the foundation for Markandu Swamy's spiritual journey, with the required characteristics such as patience and calmness evident in Markandu Swamy. He donated all his inheritance to Pirampat Murugan temple. Yoga Swamy regularly visited Kaithady and subjected Markandu Swamy to the same tribulations that Yoga Swamy himself underwent with his guru, Chellappah Swamy. On 30th December 1963, James Ramsbotham was initiated by Yoga Swamy in his Columbuthurai ashram with the following words," From today onwards, you are a sanyasi, and your name is Shanata Swamy". From this day on, Santha Swamy, became one with Markandu Swamy. Shanth Swamy left for Senkallady, Eastern Province, to establish the Sivathondan Nilayam on 14th March 1965, and he took Yoga Swamy's thiruvady and consecrated the Senkakalady Sivathondan Nilayam and Ladies Ashram, which he was instrumental in founding. He served for 14 years. Sivathondan Nilayam and Ladies Ashram stand as a living monument to Shanata Swamy. On 5th December 1973, Markandu Swamy returned to Kaithady Ashram, and he left for the UK on 14th May 1984. Markandu Swamy attained Maha Samadhi after Yoga Swamy's Magasamadhi. Markandu Swamy allowed his devotees to light camphor in Kaithady Ashram and bless the devotees with natchinthanai songs and teachings. Shanata Swamy left for the UK and stayed separately in their ancestral property in a self-contained ashram with his brother, Sir Peter Ramsbotham,

and attained mahasamathy on 12th December 2004.

Markandu Swamy's inquiry of Santha Swamy and his return to Kaithady Ashram:

In the UK, Santhaswamy had been advised of the inquiries of Markandu Swamy, which prompted Shantha Swamy to return to Kaithady Ashram on 5th December 1978. Santhaswamy stayed in Kaithady and was able to provide his services to Markandu Swamy during his last days before Markandu Swamy attained maha samathy on 29th May 1984. Santhaswamy returned to the UK on 18th May 1984. Markandu Swamy's asthi has been enshrined in the Kaithady Ashram. Karthigai poojas and annual guru poojas take place in Kaithady Ashram.

Santhaswamy stayed separately in his ancestral property in a small ashram, and left the world on 23rd December 2004. Thiru Easwaran, a devout devotee of Yogaswamy, was prepared to look similar to the appearance during his initiation on 20th December 1963. Prayers with recital of Sivapuranum, Thirumurai, and natchinthanai in Winchester, Hampshire, and later, after the Church Services, the body was cremated, and Dr Sivayoganathan, who served for the entire period in Chenkalady Sivathondan Nilayam and women's ashram, conducted the Saiva religious rites, and according to the wish of Shantha, the holy ashes were dispersed in the River Thames with the recital of Natchinthanai.

YOGASWAMIGAL'S CONCEPT OF ONE GOD:

Even though Yogaswamigal has composed several songs in praise of Lord Siva, Lord Murugan, he has emphasised his beautified concept of one God, "Orerai-Kodpadu", through his sacred sayings: "Ontru-then kadavul", "ontrukume anchael, oruvananey theivam" enkum ethilum orr eraivane urainthu nitkintrar, emphasising his concept of one God and his great respect for religious harmony.

Sivayogaswami, during his practice, mentions the sanctity of touching the head at the Sadguru's feet, the Guru's divine energy towards the devotees, which is mentioned in the Hindu Scriptures. Manivasagar, in praise of Lord Siva, has mentioned the word " Thaal 52 times, namaachivaya pathikam, quotes, "Nathan thaal valha", " neenkathan thaal vaalha", " kurumanni thaal valha! Thaal means feet! “Thiruvadi-keel meaning God’s or Sadguru's feet. The Sadguru's divine prostration padanamaskaram.

See God in everyone instead of wandering in search of God, even to foreign countries without knowing that God resides within our body as the musk deer without knowing that the fragrance is emanating from its own navel. The deer musk wanders here and there to find the source of the smell. Similarly humans without knowing that God is residing within themself wander to Kasi, Thriruchenthur, Thirupathy venkateswar, and Pathmanadaswy Temple in Trivandrum.They are not satisfied with the famous Nallur Kandaswamy Temple, 8th century historic Maviddapuram Kanthaswami Temple or Katragama Temple where Lord Murugan married valli, a skilled huntress daughter of a tribal chieftain Nambi Rajan as Sivayogaswamyigal said,"know thyself by thyself".

Thereby, the principles of Sivayoga Swamigal to go.  See God in everyone that you meet during the day and treat them as they really are God. Contemplate the truth that, in fact, you are all one, and the feeling of separation is merely an illusion; however real it may seem that your separate bodies lead you to believe that you are separate, but you are not the physical body, which is temporary, but the soul is eternal.

The supernatural powers of omnipresence, healing, and silent transmission of siddha Sivayoga Swamigal Yogaswamigal Guru is Chellappah, inaugurated the "Sivathondan" monthly journal to spread the Saiva Sitantam, and he established a centre known as "Sivathondan.' in Vannarponnai, via his devotees, to perform selfless service to Lord Siva and devotees, Siva meditation, holy way of recital of bhakti literature, and he lived strictly adhering to the Saiva culture and the Saiva diets.

Wandering mind, by adhereing  to the feet of the Guru, which enables to cross the unconquerable (bhava sagara) worldly life. Glory be to the venerable guru Yogaswamy. Chant repeatedly "Om Sivaya Nama" prostration to Guruparan, Thiruvady.

"May global peace be established with divine blessings? Finding inner peace, unity should spread like sun rays. Transform evil with goodness! Establish righteousness without blemish everywhere. May the Lord bless the whole world with eternal peace and auspiciousness. Supreme Lord! Grant us the greatest understanding and peaceful mind that we may live in the presence of divine glory.

Yogaswamy's words of wisdom   - யோகசுவாமியின் ஞானவார்த்தைகள்

"Siva siva entrida theerum pavam"chanting -  "siva siva" sins will be removed.

என்னை எனக்கு அறிவித்தான் எங்கள் குருநாதன்
இணையடி என் தலைவைத்தான் எங்கள் குருநாதன்
நாம் கடவுளை உள்ளத்தில் வளர்க்கிறோம்
நாம் அவருடைய தாய்
நமக்கும் அவருக்கும் ஒரு குறையுமில்லை
நம்மை அவர் பிரியமுடியாது
முழுதும் உண்மை

நீ உடம்பன்று, மனமன்று, புத்தியன்று, சித்தமன்று. நீ ஆத்மா. ஆத்மா ஒரு நாளும் அழியாது. இது மக்களுடைய அநுபவ சித்தாந்தம். இந்த உண்மை எனது உள்ளத்தில் நன்றாய்ப் பதியக் கடவது. ஆனால் நீ கவனிக்கவேண்டியது ஒன்றுண்டு. அதாவது, தருமநெறியில் பிசகாதே! எவ்வுயிரும் பெருமான் திருமுன்னாலே என்று சாதனை செய். கடவுள் உள்ளும் புறமும் உள்ளவர்.

இப்படிக்கு
அவனே நான்
(08/09/1955, யோகசுவாமிகள் கைப்பட எழுதியது).

We exist forever. Aanma alliyathentru antru -ennakku. Sonna-molli. Nan- maranthu-poven-odi- killiye! Nalluran-thanjamadi! This concept is clearly brought out in the words of St. Manikavasagar, "adaikalmallen eelu-pirappum unnaku aadseikiren" and in the Words of Thayumanavar, "entru nee antru naan, unnathu adimayallavo" therefore, we are forever,"naam entrumullom" are really words of wisdom of Sivayogaswamikal. The core concept is that the true self, atman (soul), is eternal and exists forever. However, this individual soul is typically bound to a continuous cycle of birth, life, death, and rebirth called samsara. The physical body is temporary, but the soul exists forever.

Even though it may be painful. Frankly, convey what justice is and contribute. My dearest Vallipuram, one who cultivates the land, doesn't think that it will hurt the land to till it, or weed it, or pave furrow, and similarly thinking that it will hurt, one should not deliver justice to one! "There is no one thing wrong; everything is true."

Yours
**Yogaswamy**

Want of an ideal Sadguru!

The guidance of the Sadguru is necessary to enable one to engage in genuine practices. In the absence of an ideal Sadguru, the aspirant, unacquainted with true sadhana, he loses faith and gives up sadhana, which is the methodical, disciplined spiritual practice to attain spiritual enlightenment. At the present time, there is a great dearth of really self-sacrificing and experienced Sadgurus, although the number of Gurus wearing saffron robes has considerably increased wherever you cast your eyes. A majority of such Gurus are immoral, seekers of fame, and it is very difficult to select an ideal Guru!

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*
*சாந்தி நிலவவேண்டும்!*
*எங்கும் ஆத்மசக்தி ஓங்கவேண்டும்!*
*கருணை, நீதி, அறம், அன்பு, உலக அமைதி*
*கதிரொளி போலப் பரவவேண்டும்!*
*நிரந்தரம் ஆத்மானந்தம் பெறவே அறம் ஓங்கவேண்டும்!*
*ஞான ஒளி பரவவேண்டும்!*
*சாந்தி நிலவ வேண்டும்!*
*ஓம் சாந்தி! சாந்தி!*

The article is dedicated to my late wife, Nesamany Selvapaskaran, for the inspiration she provided about Yoga Swamy and for leaving her notes and collection of books.
About Yoga Swamy!

"யோகசுவாமிகள் திருவடி போற்றி"
Yoga Swamygal Thiruvadi Pottri

# சிவகுமாரர்

விநாயகர், சுப்பிரமணியர், வயிரவர், வீரபத்திரர் என்னும் மூர்த்தங்களும் இறைவனது அருள் வடிவங்களாம். மாணிக்க இரத்தினத்தையும் அதன் ஒளியையும், அக்கினியையும் அதன் சுடுதல், அடுதல் முதலாகப் பலவகைப்பட்டு விளங்கும் சக்தி ஒன்றினையும், மரத்தையும் அதன் வயிரத்தையும் போன்று சிவபெருமானுக்கும் இம்மூர்த்தங்களுக்கும் பேதமில்லை என்பது உண்மை நூற்றுணிபு. ஆகையால் அவர்களும் சிவமெனப்படுவர்.

விநாயக மூர்த்தமும் சுப்பிரமணிய மூர்த்தமும் முறையே கயமுகாசுரன், சூரபன்மன் முதலாயினோரால் தேவர்களுக்கு எய்திய துன்பத்தை நீக்கி அடியார்களுக்குப் போகமோட்சம் கொடுத்தருளுதற்பொருட்டு எழுந்த மூர்த்தங்களாம்.

வயிரவமூர்த்தம், பிரமன் முதலியோர் சிவபிரானை மதியாது கொண்ட அகந்தையை நீக்குதற்கும், வீரபத்திர மூர்த்தம் தக்கன் செய்த சிவதூஷணப் பலனான பாவவினையை வீட்டுதற்கும் எழுந்த மூர்த்தங்களாம்.

சிவபிரான் பிதாவும், விநாயகர் முதலியோர் புத்திரருமாக உண்மை நூல்கள் செப்பும். அவ்வாறு ஒரு பொருளே பிதா, புத்திர இயையிற் பேசப்படுதல் நம்மவர் உணர்ந்துய்யும் ஆன்மப் பிரயோசனம் குறித்தேயாம்.

கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலும்
கயாசுரனை யவனாற்கொல் வித்தார் போலும்
செய்வேள்வித் தக்கனைமுன் சிதைத்தார் போலும்
திசைமுகன்றன் சிரமொன்று சிதைத்தார் போலும்
மெய்வேள்வி மூர்த்திதலை அறுத்தார் போலும்
வியன்வீழி மிழலையிடங் கொண்டார் போலும்
ஐவேள்வி ஆறங்க மானார் போலும்
அடியேனை யாளுடைய அடிகள் தாமே

- திருத்தாண்டகம்

காயச் செல்விக் காமற் காய்ந்து கங்கையைப்
பாயப் படர்புன் சடையிற் பதித்த பரமேட்டி
மாயச் சூரன் றறுத்த மைந்தன் தாதைதன்
மீயச் சூரே தொழுது வினையை வீட்டுவமே

- சம்பந்தர் தேவாரம்

விரித்தபல் கதிர்கொள் சூலம் வெடிபடு தமரு கங்கை
தரித்ததோர் கோலாகால பயிரவ னாகி வேழம்
உரித்துமை அஞ்சக் கண்டு ஒண்டிரு மணிவாய் விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வ னாரே

- அப்பர் தேவாரம்

பண்பட்ட தில்லைப் பதிக்கரசைப் பரவாதே
எண்பட்ட தக்கன் அருக்க னெச்சன் இந்து அனல்
விண்பட்ட பூதப் படைவீர பத்திரராற்
புண்பட்ட வாபாடிப் பூவல்லி கொய்யாமோ

- திருவாசகம்

எனவும் வரும் திருவாக்குகளால் இவ்வுண்மை தெளியப்படும்

சிவபெருமான் நெறி வழுவினோரை நிக்கிரகஞ் செய்தல் அவர் காரணமற்ற கருணைக்குக் குற்றம் ஆகாதோவெனின் தந்தை, தாயார் தம் சொல்லின்வழி ஒழுகாத புதல்வரை உறுக்கி, அடித்துக் கண்டித்து நல்வழிப்படுத்துதல் போல முதல்வன் நிக்கிரகஞ் செய்தல் செயல்வகையால் வெகுளிபோலத் தோன்றினும் கருத்து வகையால் அருளேயாம்.

அது:

தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்க டஞ்சொலாற்றின்
வந்திடா விடினுறுக்கி வளாரினா லடித்துத் தீய
பந்தமு மிடுவரெல்லாம் பார்த்திடிற் பரிவேயாகும்
இந்தநீர் முறைமை யன்றோ வீசனார் முனிவு மென்றும்

என்னும் சிவஞானசித்திச் செய்யுளால் அறியப்படும்

**நன்றி: சிவத்திரு வடிவங்கள் - பண்டிதர் வி சங்கரப்பிள்ளை சிவத்திருமன்ற வெளியீடு.**

# சிவனடியார்களை எப்படி நடத்தவேண்டும்?

“சிவன் சுவ தந்திரர். நாம் பர தந்திரர். சிவனுக்கும் சிவ பக்தர்களுக்கும் நாம் அடிமையென்று தெளிந்த மெய்யுணர்வு உடையோர், தாம் எத்துணைச் செல்வத்தோடும், எத்துணை அதிகாரத்தோடும் கூடியிருப்பினும், சிறிதாயினும் அவைகளாலே அகங்காரம் கொள்ளாமல், சிவனடியார்களைக் கண்டால், அவர்கள் எக்குலத்தார்கள் ஆயினும், அவர்களைச் சிவன் எனவே பாவித்து, எதிர்கொண்டு வணங்கித் துதித்து, விதிப்படி அமுது செய்விப்பர். இப்படிச் சிவனடியாரிடத்து அன்புடையவரே சிவனிடத்தும் அன்புடையர் என்று தெளியப்படுவர். அகங்காரம் முதலியன உடையோர் சிவனது திருவருளை அடையார்கள்.

- நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்.

# குன்றும் பார்க்கில்

ஒரு ஊரில் ஒருவன் இருந்தான். அவன் மிகவும் ஆசாரம் பார்ப்பவன். அவனுக்கு எதைக் கண்டாலும் அருவருப்பாக இருக்கும். ஒரு சமயம் அந்த ஆசாமி ஒரு கல்யாண வீட்டுக்குப் போயிருந்தான். அங்கே திருமணம் முடிந்து சாப்பாட்டுப் பந்தி ஆரம்பித்தது. இவனும் ஒரு ஓரமாக அமர்ந்து கொண்டான். இவனுக்கும் சாப்பாடு பரிமாறப்பட்டது. சாப்பாடு மிகவும் சுவையாக இருந்தது. இவனுக்குப் பக்கத்தில் இருந்த ஒருவன் பால் பாயசத்தை உறிஞ்சி உறிஞ்சி மிகவும் இரசித்துக் குடித்துக் கொண்டிருந்தான். அவன் பக்கத்தில் இருப்பவர்களைப் பற்றிக் கவலைப்படவில்லை. அவனது எச்சில் இவன் மேல் தெறித்துவிட்டது. இவன் மிகவும் சுத்தமானவன் என்பதால், அதனைப் பாவமாகக் கருதினான். இந்தப் பாவத்தைக் காசியில் தான் கரைக்க வேண்டும் என்று எண்ணி மறுநாளே காசிக்குக் கிளம்பிப் போனான்.

அந்தக் காலத்தில் போக்குவரத்து வசதி இப்போது இருப்பது போல இல்லை. வசதி இருப்பவர்கள் மாட்டுவண்டி, குதிரை வண்டியில் போவார்கள். மற்றவர்கள் கால் நடையாகவே தமது பயணத்தைச் செய்வார்கள். போய்ச்சேரவே பலநாள் ஆகும். பகல் முழுவதும் நடப்பார்கள். இரவு நேரத்தில் ஏதாவது சத்திரத்திலோ அல்லது யார் வீட்டுத் திண்ணையிலோ படுத்துத் தூங்கிவிட்டு மறுநாள் பயணத்தைத் தொடங்குவார்கள். இப்படி வரும் வழிப்போக்கர்கள் தங்குவதற்காகவே அந்தக்காலத்தில் வீடு கட்டும் போது முன்பக்கம் திண்ணைகள் வைத்துக் கட்டுவார்கள். திண்ணைகளில் வந்து தங்குபவர்களுக்கு சாப்பாடோ, அல்லது நீர்மோரோ அல்லது தம்மால் முடிந்த ஏதாவது ஒன்றை உண்பதற்கோ கொடுப்பார்கள்.

இந்த ஆசாமி பகல் முழுவதும் நடந்து, இரவு ஒரு வீட்டின் திண்ணையில் வந்து சுருண்டு படுத்தான். அந்த வீட்டுக்காரன் வந்து “ஐயா உங்களைப் பார்த்தால் ரொம்ப தூரம் நடந்து களைத்துப் போனவராகத் தெரிகிறது. உள்ளே வாருங்கள். வந்து சாப்பிட்டுவிட்டுப் படுங்கள்” என்றார்.

இவனுக்கும் நடந்த களையில் நல்ல பசிதான். ஆனால் அவனது சுத்தம், ஆசாரம் தடுத்தது. கடைசியில் வயிறு தான் வெற்றி பெற்றது. சாப்பிடுவதற்குச் சம்மதித்தான். வீட்டுக்காரன், தனது மனைவியைக் கூப்பிட்டு இவனுக்கு சாப்பாடு கொடுக்கும்படி சொன்னான்.

கைகால் சுத்தம் பண்ணிவிட்டு சாப்பிட உட்கார்ந்த நமது ஆசாமி, “அம்மா எனக்கு இலையில் சாப்பிட்டுத்தான் பழக்கம். அதனாலே இலையில் பரிமாறுங்கள்” என்று கேட்க, கொஞ்ச நேரம் யோசித்த அந்த அம்மா “சரி” என்று சொல்லி ஒரு இலையைக் கொண்டு வந்து போட்டு அதன் மேல் சாப்பாடு பரிமாறினார். சாப்பாடு நல்ல சுவையாக இருந்ததால் இவனும் திருப்தியாகச் சாப்பிட்டான். சாப்பிட்டு முடிந்து இலை எடுக்கும் போது, வீட்டுக்காரம்மா ஓடிவந்து, “ஐயா இலையை நான் எடுக்கிறேன்” என்று சொல்லி மிகக் கவனமாக எடுத்துக் கொண்டு போனார். இதைப் பார்த்ததும் அந்த ஆசாமிக்கு ஒன்றும் புரியவில்லை. “தூர வீசி எறியும் இலையை ஏன் இவ்வளவு பத்திரமாக எடுத்துக்கொண்டு போகிறீர்கள்?” என்று கேட்டான். அதற்கு அந்த வீட்டுக்காரி, “இந்த ஊரில் வாழை இலை கிடைப்பது குதிரைக்கொம்பு தான். என்னுடைய மாமனாரும் உங்களைப் போல வாழை இலையில் தான் சாப்பிடுவார். அவருக்காக ஒரே ஒரு வாழை இலை வாங்கி வைத்திருக்கிறோம். அவர் சாப்பிட்டு முடிந்ததும், அதைக் கழுவி

பத்திரமாக எடுத்து வைப்போம். நீங்களும் வந்து வாழை இலையில் தான் சாப்பிடுவேன் என்று சொன்னதும், வாழை இலை இல்லை என்று சொல்ல எனக்கு மனம் வரவில்லை. உங்களையும் பட்டினியாகப் படுக்கவிட மனமில்லை. அதனால் தான் எனது மாமனார் சாப்பிடும் இலையில், உங்களுக்கும் சாப்பாடு போட்டுவிட்டு, இப்போ பத்திரமாக எடுத்து வைத்திருக்கிறேன்" என்று சொல்லவும் இவனுக்குச் சாப்பிட்ட சாப்பாடெல்லாம் தொண்டையில் சிக்கிக் கொண்ட மாதிரி இருந்தது. "சரி, இந்தப் பாவத்தையும் காசியில் போய் தொலைப்போம்" என்று நினைத்துக்கொண்டு படுத்துத் தூங்கினான்.

மறுநாள் எழுந்து நடக்க ஆரம்பித்தான். அன்றைக்கும் பகலெல்லாம் நடந்துவிட்டு இராத்திரி ஒரு வீட்டுத் திண்ணையில் தங்கினான். அந்த வீட்டம்மா இவனைப் பார்த்ததும், "ஐயா சாப்பாடு சூடாக இருக்கிறது. வந்து சாப்பிட்டுவிட்டுப் படுங்கள்" என்றதும், எமது ஆசாமி முன்னெச்சரிக்கையாக வாழை இலைவேண்டாம் என்று சொல்லிவிட்டு, "தினமும் புழங்காத மண் பாத்திரம் இருந்தால் அதில் சாப்பாடு போட்டுக் கொடுங்கள்" என்று கேட்டான். அந்த அம்மாவும் அறைக்குள் போய் நீண்ட நேரம் தேடித் துருவி ஒரு மண் பாத்திரத்தைக் கொண்டு வந்து அதில் இவனுக்குச் சாப்பாடு கொடுத்தாள். திருப்தியாகச் சாப்பிட்ட இவன் மண்பாத்திரத்தைக் கிணற்றடிக்குக் கொண்டு போய் கழுவ ஆரம்பித்தான். கைதவறி கீழே விழுந்து மண் பாத்திரம் உடைந்து போய் விட்டது. இதைப் பார்த்ததும் அந்த வீட்டில் இருந்த கிழவி குய்யோ முறையோ என்று கத்த ஆரம்பித்துவிட்டது. "என் புருஷன் சாகக் கிடந்த கடைசி நேரத்தில் இந்தப் பாத்திரத்தில் தான் அவர் கை கழுவி, வாய் கொப்பளிப்பார். என்னுடைய கடைசிக் காலத்துக்கு இது உதவுமென்று பத்திரமா வைத்திருந்தேன். அதை இந்தப் பாவி இப்படிப் போட்டு உடைத்துவிட்டானே!" என்று அலறியது. இவனுக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது. இருந்தாலும் "இருக்கவே இருக்கிறது காசி. அங்கே போய் இந்தக் கறுமத்தையும் தொலைத்துவிடுவோம்" என்று நினைத்துக்கொண்டு படுத்துவிட்டான்.

மறுநாளும் எழுந்து நடக்க ஆரம்பித்தான். அன்று இராத்திரியும் ஒரு வீட்டுத் திண்ணையில் தங்கினான். ஆந்த வீட்டிலிருந்த பாட்டி இவனைச் சாப்பிடச் சொன்னாள். இவன் முன் அநுபவத்தால், "இலை, பாத்திரம் எதுவும் வேண்டாம். நான் கையை நீட்டுகிறேன். நீங்கள் கரண்டியால் எடுத்துப் போடுங்கள்" என்று சொன்னதும், அந்தப் பாட்டியும் அது மாதிரி செய்ய, வயிறு நிறைய சாப்பிட்டுவிட்டுத் திண்ணையில் வந்து அமர்ந்தான்.

அங்கிருந்த மாடப்பிறையில் வெற்றிலை, பாக்கு இருந்தது. பாட்டி நமக்குத்தான் வைத்திருக்கிறா போலிருக்கு என்று நினைத்து இவன் பாக்கை எடுத்து வாயில் போட்டுக் கடித்தான். இவன் கடித்ததும் பாக்கு உடைபடும் சத்தம் உள்ளே இருந்த பாட்டிக்குக் கேட்டது. பாட்டி குடுகுடு என்று ஓடி வந்து, "என்ன?" என்று விசாரித்தாள். "ஒன்றுமில்லை. இங்கிருந்த பாக்கை எடுத்து வாயில் போட்டுக் கடித்தேன். அந்தச் சத்தம் தான்" என்று ஆசாமி சொல்ல, "பரவாயில்லை உங்கள் பல் மிகவும் பலமாகத் தான் இருக்கிறது. நானும் இந்தப் பாக்கைப் பத்து நாளாக வாயிலே போட்டுக் கடிக்க முடியாமல் எடுத்து வைத்திருந்தேன். நீங்கள் ஒரே கடியில் கடித்துவிட்டீர்கள் என்றால் நீங்கள் பலசாலி தான்" என்று பாராட்டுப்பத்திரம் வாசித்தார்.

எமது ஆசாமி மிகவும் நொந்து போய்விட்டான். "போதுமெடா சாமி காசிக்குப் போன இலட்சணம்" என்று முடிவு பண்ணிக்கொண்டு, மறுநாள் தனது ஊருக்குத் திரும்ப ஆரம்பித்துவிட்டான். இது தான் ஆசாரம் பார்த்தவன் காசிக்குப் போனகதை.

எங்கேயோ படித்தவர் - அநுராதா

# சிவபுரவளாகம்

# அருள்மிகு சிவன் கோயில்

(முகமாலை)

## முதியோர் வாழும் புண்ணிய பூமி

திருமதி. தவமணிதேவி கணேசலிங்கம்

## மூதாளர் அன்பு இல்லம்

இந்தப் புண்ணிய பூமியில் இருந்து தான் இக் கட்டுரையை எழுதுகிறேன். முதியவர்களுக்காகவே இக் கோயில் நிர்மாணிக்கப்பட்டது. 8 ஏக்கர் பரப்பளவு கொண்ட காணியின் முன் புறத்தில் இச்சிவன் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. வளாகத்தைச் சுற்றியுள்ள கிராம வாசிகளும் இக் கோயிலுக்கு வருகை புரிவார்கள். மிகவும் சக்தி நிறைந்த தெய்வம். இக் கோயிலுக்கான அடிக்கல் நாட்டு விழாவானது 2018 ம் ஆண்டு மூன்றாம் மாதம் முப்பதாம் திகதி பங்குனி உத்தர நாளன்று இடம் பெற்றது. துரித கதியில் கட்டப்பட்டு முடிந்தது.

சூரிச் சிவன்கோவில் தமிழ்ச் சங்கத்தினரின் ஏற்பாட்டில்தான் யாவும் நடைபெற்றது. அழகிய சிற்ப வேலைப்பாடுகளும் வர்ணப்பூச்சும் கொண்டது இவ்வாலயம். இவ் ஆடல் வல்லான் சந்நிதியில் அருக்கன் உதிக்குமுன் அதாவது காலை 6.00 மணிக்கு முன்னரே அதிகாலைப் பூசை நடைபெறும். சங்கடஹர சதுர்த்தி, பிரதோஷ நாள்களில் பிற்பகல் 3.30 மணிக்கே விசேட பூசை நடைபெறும். நடந்து செல்லக்கூடிய முதியவர்கள் வளாகத்தின் உட்புறப் பாதையூடாக ஆலயத்துக்குச் செல்வார்கள்.

ஆலயத்தில் மூலவர் சிவன், தொடர்ந்து பரிவார தெய்வங்களான பிள்ளையார்,முருகன், இலட்சுமி, பைரவர், சண்டேஸ்வரர் சந்நிதிகளும் உண்டு. இவ்வாலயத்தின் பிரதம குருவாக பிரம்ம ஸ்ரீ சந்திராஜயர் இரகுபதி சர்மா அவர்கள் பணியாற்றுகிறார். அவர் இவ்வளாகத்திலேயே தங்கியிருக்கிறார். தைப்பொங்கல், சித்திரைப் பொங்கல் சிவராத்திரி, நவராத்திரி விழாக்களும் இவ்வாலயத்தில் தவறாது நடைபெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆலயச் சுற்றாடல் மிகவும் அழகாகக் காணப்படுகிறது. ஒரு புறம் அழகிய மலர் நிறைந்த சோலை. மறுபுறம் மாங்கனிச் சோலை. இதனை விட நிழல் தரு மரங்களும் காட்சி தருகின்றன. பூசைக்குத் தேவையான மலர்களை இவ்வளாகத்திலேயே பெற்றுக் கொள்ளலாம். மனதினைக் கொள்ளை கொள்ளும் காட்சிகள் இவை. இங்குள்ள முதியவர்கள் கவலையின்றி மகிழ்வுடன் வாழ்கிறார்கள். இவ்வளாகத்தில் வீற்றிருந்து அருள்புரியும் சிவனின் மாட்சிமை தான் இதற்குக் காரணம். இரவும் பகலும் ”ஓம் நமசிவாய” என்று உச்சரித்தால் போதும் தொல்லைகள் யாவும் நீங்கிவிடும்.

இக்கோயிலுக்கென்றே சிறப்பான பஜனைப் பாடலும் இயற்றியுள்ளேன்.

அது பின்வருமாறு :
மெட்டு :- சுட்ட திருநீறு எடுத்து தொட்ட கையில் வேலெடுத்து ........என்ற முருகன் பாடல்

ஆடல் வல்லான் சந்நிதியில்
வில்வமிலை தானெடுத்து
அர்ச்சனைகள் செய்திடுவோம்
முதியோர் நாம் - எங்கள்
துன்பமெல்லாம் நீங்கிவிடும்
ஆதிசிவன் திருவடியில்
சரணடைய வந்தோமையா
முதியோர் நாம்.

வேண்டும் வரம் தந்திடுவான்
வேதனைகள் தீர்த்திடுவான்
கங்கையைத் தலை சுமந்த ஈசனே!
அதிகாலை வேளையிலே ஆனந்த
தாண்டவத்தை ஆடுகின்றான்
மகிழ்வோடு ஈசனே!

தலை வாழைக் குருத்தெடுத்து
பொங்கல் படையலிட்டு
பிரார்த்தனைகள் செய்திடுவோம் ஈசனே!
எம்மை நோய் நொடிகள் அணுகாவண்ணம்
பாதுகாக்க வேண்டுமய்யா
சிவபுரவளாகத்து ஈசனே!
சிவபுரவளாகத்து ஈசனே!

தொல்லை மிகு இவ்வுலகில்
வேதனையில் வாடுகின்றோம்
ஆலகால விடமுண்ட ஈசனே!
சூழும் தளை அனைத்தும் நீக்கிவிட
வேண்டுகின்றோம் சிவபுர
வளாகத்து ஈசனே!
வளாகத்து ஈசனே!

நிம்மதியைத் தேடி வந்தோம்
அன்பை எதிர்பார்த்து வந்தோம்
சிற்சபையில் ஆடுகின்ற ஈசனே!
ஆதரவு தந்து எமை ஆதரிக்கும்
இல்லத்தினைக் காத்தருள
வேண்டுகின்றோம் ஈசனே!
காத்தருள வேண்டுகின்றோம் ஈசனே!

# RUBY'S

CATERING

020 8799 7180

mail@rubyscatering.co.uk | www.rubyscatering.co.uk

| உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு |
|---|---|---|





திருமணம் - பிறந்தநாள் - பூப்புனித நீராட்டு விழா
கலாச்சார நிகழ்ச்சிகள் - விருந்து உபசாரம்
அரங்கேற்றம் - வளைகாப்பு - பெயர் சூட்டும் விழா





**ACCREDITED SRILANKAN CATERERS @**

Hilton · THISTLE HOTELS (more than just accommodating) · Holiday Inn

*உட்பட பிரபல ஹோல்களில் அங்கீகாரம் பெற்ற*
*தரம்மிகு இலங்கை மற்றும்*
*தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......*

**Tel: 020 8799 7180**

mail@rubyscatering.co.uk | www.rubyscatering.co.uk


WESTERN
Jewellers
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகளை குறைந்த
விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.. உங்கள் வெஸ்டன் ஜுவலர்ஸ்.
SRI LANKAN FIRST JEWELLERY SHOP IN UK
Specialise in 22 ct Gold, White Gold, Platinum
& Diamond Jewellery.
Tooting Branch.
NO : 230
UPPER TOOTING ROAD
LONDON,
SW17 7EW
TEL : 020 8767 3445
Wembley Branch.
5 PLAZA PARADE,
29 -33 EALING ROAD,
WEMBLEY, MIDDX,
HAO 4YA
TEL : 020 8903 0909
SILK
EMPORIUM
TEL : 0208 6721 900
122 UPPER TOOTING ROAD,
LONDON, SW17 7EN.
OPENING HOURS : MON - SAT (10.30 AM - 6.30 PM). SUNDAY (11.30 AM - 6.30 PM)